# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)

“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3



**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62:10**

Translated from
BS#934
Jan-Feb 2023

**பொருளடக்கம்**

✡ சட்ட வாக்கியம் – 2023 .................... 2

✡ விசுவாசத்தின் அவசியமும் அதன் விரும்பத்தக்க தன்மையும் .................. 10

✡ எளிய மொழியில் வேதாகமம் பேசுகிறது – அறிமுகம் ..................... 17

✡ வேதாகமம் பேசுகிறது ...................... 18

✡ புது வருடத்திற்கான சிந்தனைகள்.......... 20

BS Tamil Version - 76

2023


# சட்ட வாக்கியம் 2023 - அப்.17:30-31 (KJV)

# தேவன் எதைக் காணாதவர் போலிருந்தார்

What God Winked at

யேகோவா தேவனுடைய வார்த்தையின்படி, நாம் நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தை கவனமாக ஆராய்வோமாக! ஆதாம் முதல் நம்முடைய மீட்பரின் மரணம் வரையுள்ள – “**தேவன் காணாதவர் போலிருந்த இந்த அறியாமையுள்ள**” காலப்பகுதியை நாம் கவனிப்போமாக. இந்த காலப்பகுதியில், தேவன் மனிதர்களை அறியாமையில் விட்டு விட்டார்; அதோடுகூட, அவர் குறுக்கிடவுமில்லை, கடிந்து கொள்ளவுமில்லை, ஆனால் அவர் தம்முடைய சொந்த வேலையில் தொடர்ந்து ஈடுபட்டார். தேவ ஆவியினால் ஏவப்பட்ட மூல ஆதாரத்திலிருந்து இங்கே காணப்படுகிற திட்டவட்டமான வாக்கியம் நமக்கு தெரிவிப்பதென்னவெனில், கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு புறமதத்தின் அறியாமையாகிய இருளில் வாழ்ந்து மரித்த கோடிக்கணக்கான ஜனங்கள், அந்த அறியாமைக்கு பொறுப்பானவர்களுமல்ல, அதற்காகத் தண்டிக்கப்படுவதுமில்லை. ஆயினும், இயேசுவின் மரணத்திற்கு பின் உடனடியாக, இயேசுவை விசுவாசிப்பவர்களுக்கு மன்னிப்பையும், ஒப்புரவாகுதலையும், சலுகையாக தேவன் அருளினார். மீட்கும் பொருள் கிரயம் கல்வாரியில் செலுத்தப்படும் வரையில் அவர் இதனைச் செய்ய முடியவில்லை, “**ஆனால், இப்பொழுதோ, மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.**” தேவன் இப்போது ஒரு மீட்பரை ஏற்படுத்தியிருக்கிறார்: “**அந்நாளிலே பாவத்தையும், அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்**” (சக. 13:1); ஆம் இருதயத்தில் ஒரு மாற்றத்தை அடைந்தவர்கள் அந்த நாளில் [ஆயிர வருட யுகத்தில்] தங்களை சுத்திகரித்துக் கொள்ள முடியும்.

யேகோவா தேவன், “**ஒரு நாளைக் குறித்திருக்கிறார், அதிலே அவர் ...பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்.**” ஆயிரம் ஆண்டுகளாகிய “ஒரு நாள்” என்னும் காலப் பகுதியை ஏற்படுத்தியிருக்கிறார், “**கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்**” ஆகும். (2 பேது. 3:8). ஆயிரவருட யுகம் முழுவதும், ஆயிரவருட நியாயத்தீர்ப்பு நாளாக இருக்கும், அதில் உலகத்தார் அனைவரும் சத்திய அறிவுக்குள்ளாக கொண்டுவரப்படுவார்கள். நாம் இப்பொழுது, கிறிஸ்துவின் இந்த நாளாகிய மில்லினிய நாள் என்னும் 1000 வருடங்கள் கொண்ட நீண்ட காலப் பகுதியில் 148 வருடங்களாக வாழ்ந்து வருகிறோம். அதில் உலகம் அதனுடைய பரீட்சையை சோதனையைப் பெற்றுக்கொள்ளும், அதன் பரீட்சித்தலில் கிறிஸ்துவும் சபையும் அதன் நியாயாதிபதிகளாயிருப்பார்கள், உலகத்தின் தனிநபருக்கான பரீட்சையின் சோதனைநாள் “**எல்லாவற்றையும் திரும்பக் கொடுக்கும் காலங்களின்**” போது இருக்கும். (அப். 3:21); நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். (யோவா. 12:48). பரீட்சித்தல் இல்லாமல் நியாயத்தீர்ப்பு இருக்க முடியாது, அறிவு இல்லாமல் எந்த பரீட்சித்தலும் இருக்க முடியாது; எனவே எல்லோரும் மரண நிலைமையிலிருந்து ஜீவனுக்கான பரீட்சைக்கு உட்படுத்தும்படியான நோக்கத்துக்காக புதுஉடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். வெளி. 11:18: “**மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கு... காலம் வந்தது**” என்று சொல்கிறது.




தேவனுடைய வார்த்தையினால் போதிக்கப்பட்ட பின்பு முழுமையான அறிவு மற்றும் சந்தர்ப்பத்தின் கீழ், உலக மனுக்குலத்தார் நியாயமான பரீட்சையைப் பெறுவார்கள், அது அவர்களுடைய பலவீனங்கள் மற்றும் குறைகளைக் கவனத்துக்கு கொண்டு வரும். யோவா. 5:22, “**பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்**” என்று கூறுகிறது. நம்முடைய வேதபாட வசனம், “**அவர் தாம் நியமித்த மனுஷனைக்** [இயேசு கிறிஸ்துவை] **கொண்டு**” என்பதாகச் சொல்கிறது. “**அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களை சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்.**” (சங். 96:13). தலையாகிய இயேசுவும்,சரீரமுமாகிய “**பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள்**” (1 கொரி. 6:2).

“காணாதவர் போல” என்ற வார்த்தை இங்கே உருவகமான கருத்தில் தேவன் கவனம் செலுத்தாமல், கண்டு கொள்ளாமல் இருந்ததைக் குறித்துக் காட்டுகிறது.

**COURTESY BY :**
**The Bible Standard** -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, **Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

ஜலப்பிரளயத்திலிருந்து நீண்ட காலப்பகுதியாகிய சுமார் 2500 வருடங்கள், ஜலப்பிரளயத்திலிருந்து நம்முடைய மீட்பர் கிறிஸ்து இயேசுவின் முதலாம் வருகை வரை, உலக மனுக்குலத்தார் அறியாமை, பலவீனம், மற்றும் துன்மார்க் கத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்தனர். (1 யோவா. 5:19). ஆனால் நம்முடைய பாடவசனம் அறிவிக்கிறபடி, தேவன் ஒட்டுமொத்தமாக, அதைப் பற்றி கவனமில்லாதவராகவே இருந்தார். அவர் தம்முடைய முழு கவனத்தையும், சில ஆதிப்பிதாக்களிடமும், அவர் விசேஷமான நியாயப்பிரமாண உடன்படிக்கை செய்திருந்த ஆபிரகாமின் வம்ச வழிவந்த வர்களாகிய இஸ்ரயேல் என்னும் சிறிய தேசத்தாரிடமும் (ஆமோ. 3:2) மட்டுமே வைத்திருந்தார்.

இஸ்ரயேலர்கள் மகாபெரிய கல்வி கற்கும் காலத் திற்குள் பிரவேசித்தனர்: முதலாவதாக, எகிப்தில் அடிமைத் தனத்தின் நிலைமையிலும், அதன் பின்பு, மோசேயின் அதிகாரத்தின்கீழ் எகிப்திலிருந்து கானானுக்கு வனாந் தரத்தில் நாற்பது வருடங்கள் அலைந்து திரிந்து, கடந்து சென்றதிலும்; அதற்கு மேலும், பிற்பாடு நியாயாதிபதிகளின் கீழும், ராஜாக்களின் கீழும் கற்பிக்கப்படுவதற்கு வழி நடத்தப்பட்டனர். இஸ்ரயேலர்கள் மத்தியில் காணப்பட்ட பாவத்தை தேவன் காணாதவர்போல இல்லை. அவர்களை அவர் தம், "விசேஷித்த ஜனமாக," மோசேயினால் மத்தி-யஸ்தம் செய்யப்பட்ட நியாயப்பிரமாணத்தின் கீழ் ஏற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு கீழ்ப்படியாமையும், "**நீதியான தண்ட னையை** (எபி. 2:2) **பெற்றுத் தந்தது**" என்று நாம் வாசிக்கி றோம். தெய்வீக மேற்பார்வையின் கீழ், தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னுரைக்கப்பட்ட அடிகள், தண்டனைகள் மற்றும் சிறையிருப்புகள் கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்களின் பங்காகவும் இருந்தன. அவர்கள் பங்கில் கீழ்ப்படிதல், ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது, கீழ்ப்படியா மையும், விக்கிரக வணக்கமும் சிட்சைகளைக் கொண்டு வந்தது. (லேவி. 26)-தேவன் தம்மால் தெரிந்து கொள்ளப் பட்ட ஜனங்களின் விஷயத்தில் காணாதவர் போல இருக்கவில்லை.

முதலாவது மேலோட்டமான பார்வையில் இது குழப்பமாக இருக்கும், நாம் தேவனுடைய திட்டத்தைப் புரிந்து கொள்ளவில்லையெனில், தயவுபெற்ற தேசத்தார் மற்றெல்-லாரைக் காட்டிலும் அதிக தயவு பெற்றிருந்தார்கள் என்று நாம் எதிர்பார்க்கும்படி மனதை ஒரு பக்கமாகத் திருப்பும் - அதாவது அந்த ஜனங்களுடைய அபூரணங்கள் கண்டு கொள்ளப்படவில்லை என்று தோன்றும். ஆனால் அப்படி யல்ல: இஸ்ரயேலர் ஒரு நோக்கத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்கள், மேலும் அவர்களுடைய ஊழியத்துக்காக அவர்களை ஆயத்தம் பண்ணவும், அதனை நிரப்பும்படி அவர்களைத் தகுதியாக்கவும், அவர்களுடைய பாவங்களுக் காக கர்த்தர் அவர்களைச் சிட்சித்து, வாரினால் அடிப்பித்து, இவ்வாறாக சீர்கெட்ட நிலையிலிருந்து மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக வெளிவரும்படிக்கு அவர்களுக்கு கற்றுக் கொடுத்து உதவியும் செய்தார். அதன் விளைவாக, நம்முடைய ஆண்டவர் மனுஷருடைய மீட்பராயிருக்கும்படி, உலகில் வந்த போது, இஸ்ரயேல் அநேக நூற்றாண்டுகளாக சிட்சை சாட்டையின் அடி மற்றும் போதனையின் அனுபவங் களின் கீழ் இருந்தபடியால், மதசம்பந்தமான காரியங்களில், உலகில் மிகவும் முன்னேற்றமடைந்த தேசமாக இருந்தது. (ரோம. 3:1,2).

இவ்வாறாக, மீட்பர் தம்மை ஒப்புக் கொடுக்க வந்த போது சில, "மீதியானவர்கள்" "உத்தம இஸ்ரவேலர்கள்" அவரை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தார்கள். (யோவா. 1:12) - அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் போது ஐநூறு பேரும், அதைத் தொடர்ந்து வந்த பெந்தெகொஸ்தே காலப்பகுதியில் பல ஆயிரம் பேருக்கும் அதிகமானோரும் இருந்தனர். உலகில் வேறெந்த தேசமும் மேசியாவுக்காக இருதயத்தில் ஆயத்தத்துடன் அவருக்கு முழுமையாக பிரதிஷ்டை செய்த அப்படிப்பட்ட எண்ணிக்கையுள்ள வர்களைத் தருவதற்கு கொண்டிருக்கவில்லை என்று எண்ணுவது நியாயமாயிருக்கிறது. உதாரணமாக, அத்தேனே பட்டணத்தில் மார்ஸ் மேடையில் அப். பவுலின் பிரசங்கம் மிகச் சிலரை மாத்திரமே தொட்டதாகத் தெரிகிறது. (அப். 17:34). "***சிலர் அவனைப் பற்றிக் கொண்டு விசுவாசிக ளானார்கள்.***" பவுல் தம்மை கேட்டுக் கொண்டிருந் தவர்களிடம் சில கேள்விகளை எதிர்பார்த்தார் - இந்த தேவனைப் பற்றி எங்களுக்குச் சொல்லும்படி இப்போது ஏன் நீங்கள் எங்களைச் சுற்றி வருகிறீர்கள்? அவர் எங்களுடைய சிருஷ்டிகராயும், நாங்கள் அவருடைய பிள்ளைகளாகவும் இருந்தால், ஏன் அவர் நீண்டகாலத்துக்கு முன்பாகவே ஒரு செய்தியை எங்களுக்கு அனுப்பவில்லை? மேலும் நாங்கள் அவரை அறிந்திராதபோது அவரைத் தொழுது கொள்ளாத தற்கு நாங்கள் பொறுப்பாளிகளாக இருக்கிறோமா? அப்போஸ்தலனுடைய பதில், தற்காலம் வரை நீங்கள் பொறுப்பாளிகள் அல்ல. அப்படிப்பட்ட அறியாமையையும் அல்லது விக்கிரக வணக்கத்தையும் தேவன் காணாதவர் போலவும், அல்லது கவனிக்காதவர் போலவும் இருந்தார், ஏனெனில் அவருடைய மகத்தான திட்டம் இப்போது வரைக்கும் உங்களுக்கு அந்த செய்தியை அனுப்புவதற்கு அதிகாரமளிக்கிற அளவுக்கு வளர்ச்சியின் கட்டத்தை அடைந்து விட வில்லை. இப்போதோ அந்த செய்தி உங்களுக்காகத்தான். தேவனே அதை அனுப்பிருக்கிறார். பாவங்களிலிருந்தும், எல்லா அநீதிகளிலிருந்தும் தம்முடன் இசைவுக்குள்ளாக திரும்பி வரும்படியாக - மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் அவர் கட்டளையிடுகிறார்.



## தேவன் காணாதவர் போலிருந்ததில் நீதி

சர்வ வல்லவருடைய ஈடுபாடுகள் எல்லாவற்றிலும் நீதிதான் அஸ்திபாரம் என்பதாக அவர் நமக்கு அறிவிக்கிறார். "**நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்: கிருபையும், சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்.**" (சங். 89:14). கிறிஸ்து மூலமாக நீதியைக் காட்டிலும் மேலானதாகிய அன்பையும், இரக்கத்தையும் அவர் அருளியிருந்தாலும், அவர் நீதிக்கு குறைவானவராக இருக்க முடியாது. அப்போஸ்தலனால் குறிப்பிடப்படுகிற காணாதவர் போலிருந்த இந்த காரியத்தில் நிச்சயமாக ஒரு நீதி இருந்திருக்க வேண்டும். அது என்ன?

பொதுவான உலகத்தார் மீதுள்ள மரண ஆக்கினைத் தீர்ப்பின் காரணமாகவும், அந்த மரண தண்டனையிலிருந்து மீட்பு மற்றும் உயிர்த்தெழுதல் விடுதலைக்காக, எந்த ஏற்பாடும் இதுவரை செய்யப்பட்டிராத நிலையில் தேவன் உலக மனுக்குலத்தாரிடம் பிரமாணங்களைக் கொடுத்து, அவர்களை மனந்திரும்புதல், முதலானவைகளைக் கட்டளையிடுதல், நியாயத்துக்கு புறம்பானதாய் இருந்து வந்திருக்கும் என்பதாக அப்போஸ்தலன் விளக்குகிறார். ஏன்? ஏனெனில் அவர்கள் ஏற்கனவே தேவ பிரமாணத்தின் உச்சக்கட்ட தண்டனையாகிய மரணத்துக்கு தீர்ப்பளிக்கப் பட்டிருந்தனர். அவர்கள் எவ்வளவு கெட்டவர்களாக வாழ்ந்தாலும், அவர்களை அழிப்பதைக் காட்டிலும் அதிகமாக வேறெதுவும் அவர்களுக்குச் செய்ய முடியாது; அத்துடன் அவர்களால் செய்ய முடிந்த எதுவும் அவர்களை நித்திய ஜீவனைப் பெற தகுதியுள்ளவர்களாகச் செய்யவும் முடியாது. அந்த மரண ஆக்கினைத் தீர்ப்பு அவர்கள் மீது இருக்கும் வரையிலும், அதிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு, எந்த நம்பிக்கையும் அளிக்கப்படாத நிலையில், தேவன் அவர்களுடைய ஆபூரணத்தைக் குறித்து, போதுமான அளவுக்கு நீதியுள்ளவராக, "**காணாதவர் போல**" இருந்ததுடன், அவர்களைத் தனியாக விட்டு விட்டதுடன், அவர்களுடைய பொறுப்பில் பிரத்யேகமாக அதைச் சுமத்தவுமில்லை.

யூதர்களைப் பொறுத்த வரையில் இது வித்தியாசமானதாயிருந்தது. தேவன் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகள், மற்றும் அவர்களுடைய தவறான செயல்களுக்காக சிட்சைகள் மூலமாக அந்த தேசத்தாருக்குப் போதித்து, இவ்வாறாக, அவர்களில், "உத்தம இஸ்ரயேலர்களின்" ஒரு கூட்டத்தை, ஆவிக்குரிய காரியங்களுக்கு ஆயத்தமாக இருக்கும்படி தயார் செய்திருந்தார். கூடுதலாக, அவர்களையும் அவர்களுடைய அனுபவங்களையும் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு எதிர்காலத்திலும்கூட அடையாளங்களாக அல்லது பாடங்களாகப் பயன்படுத்த அவர் விரும்பினார். இந்த அடையாளங்கள், பரிசுத்த ஆவியின் வழிகாட்டலின் கீழாக, புதியஏற்பாட்டின் மூலமாக, இந்த சுவிசேஷ யுகத்தின் ஒரே மெய்யான சபையாகிய, ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு மிகவும் பயனுள்ள பாடங்களை உள்ளடக்கியிருந்தது. எப்படியெனில் நியாயப் பிரமாண உடன்படிக்கை, "**வரப்போகிற நன்மைகளின்... நிழலாய் மாத்திரம் இருந்தது.**" (எபி. 10:1; 8:5).

ஆனால் இஸ்ரயேலருடன் இந்த ஈடுபாடு கொள்வதற்கு முன்பாக, தேவன் அவர்களுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி, அவர்கள் கீழ்ப்படிந்து நடந்தால், அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பதாக வாக்களித்திருந்தார். (நெகே. 9:29; கலா. 3:12). அவர்கள் சந்தோஷமாக இந்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு நீதியாக வாழ கடும் முயற்சி செய்து நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவும் கடும் முயற்சி செய்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் நித்திய ஜீவனை அடைந்து கொள்ளவில்லை, ஏனெனில் அவர்கள் அதைக் கைக் கொள்ள முடியவில்லை; நியாயப் பிரமாணம் குறையுள்ளதாயிருந்தது என்பதினால் அல்ல, ஆனால் அவர்கள் ஆதாமின் விழுந்து போன சந்ததியாகிய மற்ற எல்லா அங்கத்தினர்களையும் போலவே, அபூரணராயிருந்தார்கள். தேவன் அவர்களுடைய பலவீனங்களை அறிந்திருந்ததினால், அவர்களுடைய உடன்படிக்கையின் பலனாக ஏமாற்றத்தை அடையும்படி அவர்களை அனுமதித்தார், ஆனால் அப்படி இருந்தாலும், அவர் அதனை, ஒரு மிகப் பெரிய ஆசீர்வாதமாக – போதிக்கும் கருவியாக அவர்களுக்கு ஏற்படுத்தினார் – அது நாம் பார்த்தபடி முடிவாக பல்லாயிரம் பேர்கள் இருதய நிலைமையில் மிகவும் முதிர்ச்சியடைந்தவர்களாக, இரட்சகருக்கென்று ஆயத்தமாயிருக்கவும், அவருடைய சீஷர்களாக மாறவும் அவர்களை ஆயத்தப்படுத்தியிருந்தது.

யூதர்கள் அப்பொழுது, அந்த காலம் வரைக்கும், புறஜாதியாருக்கு இல்லாத இந்த அனுகூலத்தைப் பெற்றிருந்தார்கள், அவன் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றிருந்தான். அவன் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை அறிந்திருந்தான். முடியாத காரியத்தைப் பூரணமாக கைக்கொள்ள, கடுமையாக முயற்சிப்பதினால் கிடைக்கும் பலனைப் பெற்றுக் கொண்டான். தேவன் இஸ்ரயேல் தேசத்தை நியாயப்பிரமாண உடன்படிக்கையின் பாடசாலை செயல்முறைகளின் கீழாக கொண்டு வருவதற்கு தேர்ந்தெடுத்திருக்கவில்லையெனில் (கலா. 3:24) அந்த காலகட்டம் வரைக்கும் மற்ற தேசங்களின் மீறுதல்கள் விஷயத்தில் அவர் நடந்து கொண்டது போலவே அவர்களுடைய அறியாமை முதலியவைகளையும் அவர் "காணதவர் போலவே" இருந்திருப்பார்.

## இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்

உலகத்தாரின் பாவங்கள் மற்றும் அபூரணங்களைக் காணாதவர் போலிருந்ததிலிருந்து, அவர்களை மனந்திரும்பும்படி கட்டளையிடுவதில் தேவனுடைய பங்கில் இந்த மாற்றத்திற்கான இரகசியம் என்ன? அவர்களுடைய பாவங்களை ஆயிரக்கணக்கான வருடங்கள் காணாதவர் போல் இருந்தாரானால், தேவன் ஏன் தொடர்ந்து அவர்களிடம் காணாதவர் போலவே இருக்கவில்லை? இந்த கேள்விக்குப் பதிலாக அப்போஸ்தலன், தேவனுடைய ஈடுபாட்டில் இந்த மாற்றம் தான், உலகத்தார் யாவரும், மனம்




திரும்பவேண்டும் என்ற செய்தியை அனுப்பி வைத்தது. அந்த செய்தி, தேவனுடைய நித்தியமான நோக்கங்கள், அந்த நேரத்தில் – வளர்ச்சியின் கட்டத்தை அடைந்திருந்தது என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தது, இதுவே அப்படிப்பட்ட செய்தியைக் கொடுத்ததை நியாயப் படுத்துகிறது என்று நமக்குச் சொல்லுகிறார்.

தேவனுடைய குமாரன் உலகத்தோற்றத்துக்கு முன் பிதாவிடம் தாம் கொண்டிருந்த மகிமையை விட்டுவிட்டு வந்தார். அவர் ஒரு மனுஷனாக மாறுவதற்கு தம்மைத் தாமே தாழ்த்தினார். மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக அவர் பரமபிதாவின் சித்தத்துக்கு கீழ்ப்படிந்து நடந்து கொண்டதுடன், தம்முடைய ஜீவனை, தியாக பலியாகக் கொடுத்தார். – முதலாவது, அது இந்த சுவிசேஷ யுகத்தின் போது பிரதிஷ்டை செய்த விசுவாசிகளுக்கு பலனளிப்பதாக இருக்கிறது; இரண்டாவது அது மேசியாவின் ஆளுகையின் போது, உலக மனுக்குலத்தாரை ஆசீர்வதிப்பதாக இருக்கிறது. (1 தீமோ. 2:6; 1 யோவா. 2:2).

குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு, இந்த நற்செய்திகள் யூத தேசத்துக்கு கட்டுப்படுத்தப்பட்டிருந்தது, (மத். 10:5,6). இயேசு சிலுவையில் அறையப்பட்டு, 3 $^{1}/_{2}$ வருடங்களுக்குப் பின்பு, அந்த செய்தி சம்பந்தமான இஸ்ரயேலருடைய தனிப்பட்ட தயவு ஒரு முடிவுக்கு வந்தது. அதன்பின்பு, மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்திகள், யூதர்கள் அனுபவித்த அதே நிபந்தனைகளின் கீழ், புறஜாதியார் எல்லாருக்கும், செல்வதற்கு அனுமதிக்கப்பட்டன.

சுவிசேஷம் அல்லது "நற்செய்தி" என்பது தேவன் தம்முடைய இரக்கத்தினால் ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததியார் மீதான மரண ஆக்கினைத்தீர்ப்பு என்றென் றைக்கும் நிரந்தரமானதாயிராமல், நீதிமான்களும், அநீ-திமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்து வருவார்கள் (அப். 24:15) என்றும், இதற்கான முன்னேற்பாடு மீட்ப ருடைய மரணத்தில், அதன் மூலம் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டு விட்டது என்ற செய்தியை உள்ளடக்கி யிருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலில் விழித்து எழும்புவதில், யாவரும் இப்பொழுது அவர்கள் இருக்கிற அதே இடத்திலேயே மீண்டும் வைக்கப்படுவார்களானால், அதனால் என்ன நன்மை ஏற்படக் கூடும் என்று விசாரித்து கேட்கப்படுகிறதா?

அப்படிப்பட்டதொரு உயிர்த்தெழுதலில் விழித் தெழும்புவதில் எந்த நன்மையும் இல்லை என்பதே இதன் பதிலாயிருக்கிறது. யூதர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாதவர்களாக இருந்து, அத்துடன் புறஜாதியாரில் மிகச் சிறந்த நோக்கம் கொண்டவர்கள் தங்களை அபூரணர்களாக கண்டு கொண்டதுடன், தற்கால வாழ்வில் தேவனுக்கு முன்பாக தங்களை அங்கீகரிக்கப் பட்டவர்களாக நிற்பதற்கான முயற்சியில் தோல்விய டைவார்களானால், மரண நித்திரையிலிருந்து அவர்களை விழித்து எழும்பச் செய்வதினால் மட்டும் என்ன நன்மை கிடைக்கப் போகிறது? மிருக ஜீவன்களைப் போல அவர்களை அழியும் படி விட்டு விடுவது எந்த வகையிலும் ஞானமுள்ளதும் சிறந்ததுமாக இருக்கும் அல்லவா?

தேவனுடைய வார்த்தை அவருடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு மிகவும் மகத்துவமான பலனை வெளிப் படுத்துகிறது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். வேதவாக் கியங்களில் உயிர்த்தெழுதல் என்று பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையானது புத்துயிர் பெற்று விழித்தெழுவதைக் காட்டிலும் மிகவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. இது விழித்தெழுதலையும் அத்துடன் கூடுதலாக எல்லா பாவம் மற்றும் மரண நிலைமைகளில் இருந்து விடுவிக்கப்பட்டு, மேலே, மேலே, மேலே பூரணத்திற்கு (லூக். 20:35,36) உயர்த்தப்படுதலையும் குறித்துக் காட்டுகிறது. அதாவது தகப்பனாகிய ஆதாமினால் இழக்கப்பட்ட எல்லாவற்றையும் இயேசுவின் பலியினால் மீட்டுக் கொள்ளப்பட்டதை முக்கியப்படுத்துகிறது.


## "தேவன் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்"

அப்படியானால், இதுவே, அப்போஸ்தலனுடைய விவாதத்திற்கான அர்த்தமாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சபைக்கும் உலகத்தாருக்கும் மீட்பராக ஏற்படுத்துவதன் மூலமாக, ஆதாமுக்கும், அவன் சந்த திக்கும், தேவன் ஒரு புதிய பரீட்சையை அல்லது நியாயத்தீர்ப்பை சாத்தியமாக்கியிருக்கிறார். ஆதாமின் முதல் நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சையின் நாள் ஏதேனில் நடந்தது, அங்கே அவர் தன்னுடைய கீழ்ப்படியாமையினால் எல்லாவற்றையும் இழந்து, தனக்கும் தன் சந்ததிக்கும் தேவன் தந்த மரண ஆக்கினைத் தீர்ப்பை வருவித்துக் கொண்டார். அவர்களுக்கு தனித்தனியாக நித்திய ஜீவனுக் காக அல்லது நித்திய மரணத்திற்காக இன்னொரு முழுமை-யான, நியாயமான பரீட்சை அல்லது நியாயத்தீர்ப்பை கொடுக்க வேண்டும் என்ற உண்மையான நோக்கத் திற்காகவே, கிறிஸ்துவானவர் ஆதாமையும் அவன் சந்ததியையும் மீட்டுக் கொள்ளும்படித் தோன்றினார்.

பரி. பவுல் அப்போஸ்தலனால் நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த பொதுவான நியாயத்தீர்ப்பு நாளானது, ஆக்கினை தீர்ப்பளிக்கும் ஒரு நாளுமல்ல, 24 மணி நேரம் கொண்ட ஒரு நாளும் அல்ல. இது கிறிஸ்துவின் ஆயிர வருட நாளாகிய, அவருடைய மத்தியஸ்த ஆளுகையின் காலமாக இருப்பதால், அப்போது சாத்தான் முற்றிலுமாகக் கட்டப்படுவான், எல்லாவித தீமையான ஆதிக்கங்களும் அகற்றப்பட்டு, தேவனுடைய மகிமையின் அறிவின் ஒளி பூமியனைத்தையும் நிரப்பும்படி செய்யப்படும். பரி. பேதுரு, "**பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்**

**போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்**" (2 பேது. 3:8) என்று நமக்கு நினைவு படுத்துகிறார். இதுவே "கிறிஸ்துவின் நாள்" "நியாயத்தீர்ப்பின் நாள்" போன்ற வார்த்தைகளுக்கு திறவுகோலாய் இருக்கிறது.

உயிரோடிருக்கிறவர்களும், மரித்தோர்களுமாகிய மனுக்குலத்தார் யாவரும், தேவனைப் பற்றிய முழுமையான அறிவை அடையவும், ஆதாமின் பாவத்தில் நம்முடைய பங்கு மற்றும் நம்முடைய சொந்த பலவீனம் மற்றும் அறியாமையின் விளைவாக ஏற்பட்ட எல்லாவித பெல-வீனங்கள் மற்றும் அபூரணங்கள் போன்றவற்றிலிருந்தும், உயிர்த்தெழுதல் நடைமுறையின் மூலமாக ஒரு நிறைவான உயர்த்தப்படுதலையும் திரும்பப் பெற்றுக் கொள்ளும் ஒரு முழுமையான சந்தர்ப்பத்துக்கு கொண்டு வரப்படுவார்கள் என்ற கருத்தில், அந்த மத்தியஸ்தர் ஆட்சியானது, நியாயத்தீர்ப்பின் நாள் அல்லது பரீட்சித்தலின் நாளாக இருக்கும். பாவங்கள் எவ்வளவு துணிகரமாக இருந்ததோ, அதே அளவில் தண்டிக்கப்பட்டு, "**நீதியான தண்டனை கொடுக்கப்படும்.**" (எபி. 2:2). ஒவ்வொரு நல்ல முயற்சிக்கும் வெகுமதியளிக்கப்படும். ஒவ்வொரு மீறுதலுக்கும் தண்ட-னையளிக்கப்படும்.




இந்த நோக்கிலிருந்து அப்போஸ்தலனுடைய விவா-தத்தின் வலிமையை நாம் அறிந்து கொள்கிறோம். அதாவது, ஆதாமின் சந்ததியில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் நான்கு பகுதிகள் கொண்ட இன்னொரு பரீட்சையைக் கொடுப்பதே தேவனுடைய நோக்கமாயிருக்கிறது.

1. நீதியைப் படிப்பித்தல்
2. விரிவான படிப்பித்தலுக்கு பின்பு பரீட்சித்தல்
3. விரிவான படிப்பித்தல் மற்றும் பரீட்சித்தலுக்குப்பிறகு சீர்படுத்துதல்
4. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்து முழுமையான அறிவும், புரிதலும் பெற்ற பின்பு தீர்ப்பளித்தல்.

ஒவ்வொருவரும் தனித்தனியாக நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள தகுதியா அல்லது தகுதியில்லையா என்பதை புதிதாக தீர்மானிக்கும்படி, தேவனுடைய அன்பி-ரக்கத்துக்கு இது இன்னொரு எடுத்துக்காட்டாயிருக்கிறது. ஏனெனில் "**ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.**" (சங். 63:3) ஆனால் ஏன் இந்த விவுயமானது தற்கால வாழ்வில் உலகத்தாருக்கு எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை? ஏன் தேவன் மேசியாவின் யுகம் வரைக்கும் காத்திருந்தது அவர்கள் எல்லாருக்கும் ஒரு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை? ஏன் அவர் தம்முடைய அன்பு மற்றும் தம்முடைய எதிர்கால ஈடுபாடுகளைக் குறித்த இந்த அறிவு பற்றிய வெளிப் படுத்தலின் செய்தியை அவர்களுக்கு அனுப்பினார்? கடந்த 19 நூற்றாண்டுகள் நிரூபித்தது என்ன என்பது அவருக்கு தெரியாதா? அதாவது மனுக்குலத்தாரில் சிலர் மட்டுமே "கேட்கிற காதைக்" கொண்டிருந்தனர்; அதிலும் மிகச் சிலர் மட்டுமே கேட்டபிறகு பாவத்திலிருந்து மனந்திரும்பி, இவ்வாறாக நீதியை நேசித்து இவ்வாறு அக்கிரமத்தை வெறுத்து, சுவிசேஷ செய்தியை அறிவிப்பதன் மூலமாக தற்கால ஜீவியத்தின் விருப்பங்களையெல்லாம் பலியிடவும், எல்லா அநீதிக்கும் எதிராக, தேவபக்தியுள்ள ஜீவியம் செய்ய நாடுகிறவர்களாகவும் இருந்தனர்.

ஆம், "**உலகத்தோற்றமுதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகள் எல்லாம் தெரிந்திருக்கிறது**" (அப். 15:18) என்று எழுதியிருக்கிறது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். தேவனுடைய கிருபையைப் பற்றிய செய்தி, பொதுவாக கேட்பதற்கு மந்தமான செவிகளின் மீது விழும் என்று நிச்சயமாக அவர் அறிந்திருந்தார். நாம் இதை அறிந்து கொள்ளும்படிக்கே சிலர் மாத்திரமே தம்முடைய அன்பு மற்றும் இரக்கத்தின் செய்தியைக் கேட்கிற செவியைக் கொண்டிருப்பார்கள் என்று அவர் இதனை தீர்க்கதரிசனங்களில் முன்கூட்டியே எழுதப்படும்படி செய்தார். அப்படியானால் ஏன் அவர் இந்த செய்தியை அனுப்பினார்? அவர் இப்படி செய்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன என்று நாங்கள் பதிலளிக்கிறோம்:

தேவன், புரிந்து கொள்ளுகிறவர்கள் வாழ்வில் ஒரு சீர்திருத்தத்தை தூண்டியெழுப்பக்கூடிய வகையில் ஒரு சாட்சி கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கமுடையவராயிருந்தார். இந்த மீட்பைப் பற்றிய உண்மையைக் குறித்த அவர்களுடைய அறிவின் விகிதத்துக்கேற்றபடி ஜீவியத்தில் அவர்களுடைய பொறுப்பு இருக்கும் என்பதை எல்லாரும் அறிந்து கொள்ளவேண்டும் என அவர் விரும்பினார். இந்த கோட்பாடு வேதவாக்கியங்களில் நம்முடைய கர்த்தரால் சொல்லப்பட்டிருக்கிறது. புதிய நேகமத்தில் அறியாதிருந்தவர்களும், அதனால் கீழ்ப்படியாதிருந்தவர்களும் மற்றவர்களோடு ஒப்பிடும்போது, சில அடிகளால் தண்டிக்கப் படுவார்கள் என்றும், அதே சமயம் அதிகமாக அறிந்து கொண்டவர்கள் துணிகரமாகச் செய்த பாவங்களுக்கு அநேக அடிகளால் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் அறிவிக்கிறார். (லூக். 12:47,48).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாள் பற்றிய இந்த நல்ல செய்தியை அறிவிப்பதற்கான இன்னொரு காரணம் என்னவெனில், தேவன் இந்த செய்தியை ஒரு ஆரம்பநிலை பாடமாக, அவருடைய மத்தியஸ்தர் ஆட்சி தொடங்குவதற்கு முன்பு தற்காலத்தில் அவர் தேடுகிற "பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள்" என்று அழைக்கப்படுகிற ஒரு

விசேஷித்த வகுப்பாருக்கு, அடிப்படையான போதனை செய்யும் வேலைக்குப் பயன்படுத்த விரும்புகிறார்.

இந்த வகுப்பார், கிறிஸ்துவின் ஆயிரவருட யுக மத்தியஸ்தர் ஆட்சிக்கு முன்னேறி வருகிறதான இக்காலத்தில், உலகத்திலிருந்து விசேஷமாக அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் முடிவாக ஆபிரகாமின் வித்தாக, பூமியிலுள்ள சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பார்கள். (கலா. 3:8,16,29). இவர்கள் வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவுடன்கூட உலகத்தில் துணை நிலை நியாயாதிபதிகளாக இருப்பார்கள். பரி. பவுல், "**பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயம்தீர்ப் பார்களென்று அறியீர்களா?**" (1 கொரி. 6:2) என்று கேட்கிறார். நாம் இதனை அறிந்திருப்பதால், தேவனுக்கு நன்றி சொல்கிறோம்! மேலும் அவர்கள் அந்த வேலைக்கு முற்றிலும் தகுதியுடையவர்களாய் இருப்பார்கள் என்று நாம் அறிகிறோம். பூமிக்குரிய ஜீவிய காலத்தில், உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில் அவர்களுடைய அனுபவங்கள் மற்றும் மகா பிரதான ஆசாரியருடைய ஒத்தாசையின் மூலமாய் ஜெயம் பெற்று வருவது, அவர்களை உலகத்தாரை நியாயம் விசாரிக்கும் தகுதியான நியாயாதிபதிகளாகவும், உலகத்தாருக்கு உதவிபுரியும் படியாகவும், அவர்களை ஆசீர்வதிக்க தகுதிவாய்ந்தவர்களாகவும், ஆவிக்குரிய நிலையிலிருந்து நிர்வகிக்கப்படுகிற இந்த வேலையிலுங்கூட பாத்திரவான்களுக்கு உதவி செய்வதில் தகுதிவாய்ந்த ஊழியக்காரர்களாகவும் அவர்களை உருவாக்கும்.

## உங்களை நீங்களே கட்டியெழுப்புதல்

எங்குமுள்ள எல்லா மனிதர்களும் மனந்திரும்ப வேண்டும் என்று எச்சரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், அதோடுகூட அவர்கள் ஏன் மனந்திரும்ப வேண்டும் என்ற நல்ல காரணத்தை அவர்களுக்கு கொடுப்பதிலும் - தேவனால் நியமிக்கப்பட்ட நேரமாகிய மேசியாவின் காலத்தையும், அந்த காலத்தில் கிறிஸ்துவின் மூலமாக எல்லோரும் நித்திய ஜீவனை அடைந்து கொள்ளும் ஒரு முழு சந்தர்ப்பத்தையும் பெற்றுக் கொள்வார்கள் என்பதைப் பற்றியும் சொல்வதிலும் மகிழ்ச்சியடைகிறோம். இப்பொழுது நீதிக்காக எடுத்து வைக்கப்படுகிற ஒவ்வொரு பெருமுயற்சிக்கும், மிகப் பெருமளவிலான குண அபிவிருத்தியையும், சிறந்த ஸ்தானத்தையும் அவர்களுக்கு ஆதாயமாகக் கொண்டுவரும் என்பதை அவர்களுக்கு உறுதி செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஒவ்வொரு துணிகரமான மீறுதலுக்கும், மனப்பூர்வமான அறியாமை அனைத்துக்கும், அவர்கள் மீது அவர்களுக்கு தீமை விளைவிக்கும்படியாக பிரதிகிரியை செய்து, அந்த புதிய நாளின் மகிமையான சூரிய வெளிச்சத்தின் கீழ் அவர்களுக்கு அவமானத்தையும், நீடித்திருக்கும் அவமதிப்பையுமே உருவாக்கும் என்று நாங்கள் சத்திய செய்தி மூலம் அவர்களை எச்சரிக்கிறோம். அது அவர்களுடைய பெலவீனங்களையும், அவர்களுடைய பாவங்களையும் தேடிக் கண்டுபிடித்து, அவைகள் கண்டுணரப்பட்டு, அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டு அல்லது எதிர்க்கப்படாத அளவுக்குத்




தக்கதாக அவைகள் மனுக்குலத்தார் யாவருக்கும் வெளிப்படுத்தப்படும்.

தெரிந்து கொள்ளப்பட்ட சிலருடைய நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சை இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவர்கள் மீட்பருடைய பலியில் விசுவாசம் வைப்பதன் மூலமாகவும், அன்பின் பிரமாணமாகிய-அவருடைய ஜீவனுள்ள ஆவிக்குரிய பிரமாணத்திற்கு கீழ்ப்படிதல் மூலமாகவும் தங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்குவதில் திராணிக்குத்தக்கதான பெலத்தோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இப்பொழுதே அவர்களுடைய பரீட்சை அல்லது சோதனையின் நாளாகிய நியாயத்தீர்ப்பு நாளாகும். (1 பேது. 4:17), நாம் சபைகள் அல்லது சபைப் பிரிவுகள் அல்லது கழகங்கள் அல்லது சங்கங்கள் அல்லது குடும்பங்களைப் போல நிற்கவோ அல்லது விழுந்துபோகவோ மாட்டோம். நம்முடைய பரீட்சை தனிநபர் சம்பந்தமானதாயிருக்கிறது. கர்த்தருக்கும், அவருடைய சத்தியத்துக்கும், சகோதரருக்கும் இருதயத்தில் உத்தமமாயிருப்பதற்கு குறைவான ஒன்றும் ராஜ்யத்துக்கு நம்மைத் தகுதிப்படுத்தாது. தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் சோதனையின் மத்தியில் நிற்பதற்கு கிருபையையும், பொறுமையையும் கொடுப்பாராக, அதனால் நாம் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கலாம்! (யாக். 1:4).

யுகங்களைப் பற்றிய தேவனுடைய திட்டத்தில் காலங்களையும் சமயங்களையும் குறித்துப் படிக்கிற வேத-மாணாக்கர்கள் என்ற வகையில், நாம் இப்போது தெரிந்து கொள்ளப்பட்டவர்களை மட்டும் அழைக்கிற வேலை நிறைவடைந்து விட்டது என்பதை உணர்ந்து கொள்கிறோம். நாம் இப்போது 2022-ஆம் ஆண்டிலிருந்து 1954-க்குப் பிந்திய பாளயத்தை நோக்கிப் பார்க்கிறோம். 1954 இலையுதிர் காலத்திலிருந்து பிரதிஷ்டை செய்து வருபவர்கள் அதிக எண்ணிக்கையிலான சகோதரர்களாக இருக்கின்றனர். அவர்கள் தங்கள் நிலை நிற்றலை பாளயத்தில் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்களாக கொண்டிருக்கிறார்கள். பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் நிறைவேறுதலான நிதனீமியரில் மிக உயர்ந்த வகுப்பாராய் இருப்பதுடன், பிரகாரத்தில் இருக்கிற நிறைவேறுதலான லேவியர்களான வாலிபரான பாத்திரவான்களான சகோதரர்களுடன் ஒத்துணரும் ஒருமைப்பாட்டுடன் ஊழியம் செய்கிறார்கள். மேலும் அவர்கள் இந்த

வாலிபரான பாத்திரவான்களாகிய சகோதரர்களுடன் மிகவும் நெருக்கமான தொடர்புடையவர்களாய் இருக்கிறார்கள், இருவருமே ஒரே மாதிரியான நிறைவேறுதலான மனாசே கோத்திரத்தாராக இருக்கிறார்கள். 1954-க்கு முந்திய தேவனுடைய வார்த்தையின் பயன்பாட்டைக் கவனமாக ஆராயவும், அதே வேதவாக்கியத்தை 1954-க்கு பிந்தி பயன்படுத்துவதிலும் ஒப்பிட்டுப்பார்க்க, முன்னேற்றமடைந்து வரும் நிலைமாறுதல் பற்றி நம்முடைய கவனத்துக்கு கொண்டுவர நாங்கள் விரும்புகிறோம். இன்று வரை தொடர்ந்து வந்த எல்லா யுகங்களிலும், இதுவே தேவன் பயன்படுத்தி வருகிற வழிமுறை என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். ஆம், விரிவாக்கப்பட்ட இந்த சுவிசேஷயுக அறுவடை வேலையின் காலத்தில் தேவன் தம்முடைய நிகழ்கால சத்தியத்தை முன்னுக்கு கொண்டுவர தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரங்களை கண்டு கொண்டார்.

E. Vol.11, பக்கம் 340-ல், "தேவன் இயேசுவுக்கு இந்த கால கட்டங்கள் குறித்த ஏற்றகால சத்தியங்களை புரிந்து கொள்ளும் அறிவைக் கொடுக்கிறார். இயேசுவானவர் அந்த ஏற்றகால புரிந்து கொள்ளுதலை பரோஷியா மற்றும் எபிஃபெனி தூதுவர்களுக்கு, அவர்களும் அது சம்பந்தப்பட்ட காரியங்களை படித்தபடியால், கொடுத்து வந்திருக்கிறார். அவர்கள் இவற்றை ஆசாரியர்களுக்கு கொடுத்தனர், அவர்களிடமிருந்து அவை லேவியர்களுக்கு சென்றன. அவர்கள், ஆசாரியர்களுடன் சேர்ந்து முறைப்படி பாளயக்காரர்களுக்கு கொடுத்தனர்" என்று நாம் வாசிக்கிறோம். நம்முடைய மகா யேகோவா தேவன் தம்முடைய வார்த்தைகளை வழங்கி பரவச் செய்வதற்காக முன்னேற்றமடைந்து வரும் ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறார். PT 1983, பக்கம் 79-ல் "சுவிசேஷ யுக சபையாகிய முதற்பேறானவர்கள் பூமியைவிட்டு கடந்து சென்று விட்டபடியால், நம்முடைய நாளில் பிரதிஷ்டை செய்திருக்கிற 'யுகங்களுக்கிடையில் பிரதிஷ்டை செய்கிறவர்கள், தேவன் தாபரிக்கும் ஸ்தலமாக, ஜனங்களை சந்தித்து ஆசீர்வதிக்கும் இடமாக இருக்கிறார்கள்.' அவர்கள் மீது நிறைவேறுதலான மேகம் மற்றும் அக்கினி ஸ்தம்பமாகிய ஏற்றகால சத்தியமும், அதன் ஆவியும் தங்கியிருக்கின்றன, அவர்கள் இவற்றின் களஞ்சியங்களாய் இருக்கின்றனர்," என்று நாம் வாசிக்கிறோம். இப்போது நாம் யுக மாறுதலைக் குறித்து சில கருத்துக்களைக் கவனிப்போமாக.

வேதாகமம் பிரதிஷ்டை செய்த ஜனங்களைக் குறித்துக் காட்ட கன்னிகைகளை உபயோகப்படுத்துகிறது. (சங். 45:14,15; வெளி. 14:4; உன். 1:3; 6:8 ஆகியவற்றை வெளி. 7:9; 2 கொரி. 11:2 உடன் ஒப்பிடுக; E.Vol.17, பக்கம் 289 பார்க்கவும்). E.Vol.6, பக்கம் 575-ல் "நற்செய்திகளைப் பரப்பும் பெண்கள்" பற்றி (சங். 68:11; ARV) ஜாண்சன் போதகர்; "நாங்கள் இந்த கருத்தை (1954-க்கு முன்பு) பின்வருமாறு புரிந்து கொள்கிறோம். இங்கு சொல்லப்பட்ட ஸ்திரீகள் அடையாளமானவர்கள். அவர்கள் பிரதிஷ்டை செய்தவர்களைக் குறித்துக் காட்டுகிறார்கள், அவர்களில் சிறுமந்தை ஒரு அடையாளமான ஸ்திரீயாகவும், திரள் கூட்டத்தார் 60 அடையாளமான ஸ்திரீகளையும், வாலிபரான பாத்திரவான்கள் 80 அடையாளமான ஸ்திரீகளையும் உள்ளடக்கியிருக்கிறார்கள் அல்லது முடிவாக உள்ளடக்கியிருப்பார்கள். அடையாளமான இந்த ஸ்திரீகள் யாவரும் உன். 6:8,9-ல் குறித்துக் காட்டப்படுகிறார்கள், அதே சமயத்தில் அவர்கள் ஒவ்வொருவரும், தனித்தனியாக வசனம் 8-ல் சொல்லப்பட்ட தொகையில்லாத கன்னியராய் இருக்கிறார்கள்" என்று தெரிவித்துள்ளார். சிறுமந்தையினர் இன்னும் மாம்சத்திலிருந்த போது இது எபிஃபெனியில் உள்ள அந்த காலத்துக்குப் பொருந்துவதாய் இருக்கிறது. இந்த காலப்பகுதியில் வாழ்ந்த சிறுமந்தையினர் குறித்து ஜாண்சன் போதகர் E.Vol.11, பக்கம் 708-ல் "அவளுடைய [சிறுமந்தையினுடைய] ஊழிய பிரதேசத்தில் ஒரு பகுதியாக அங்கே 60 திரள்கூட்ட வகுப்பார்களும், (மூன்று இருபது ராஜஸ்திரீகள் - three score queens) வகுப்பார்களும், 80 வாலிபரான பாத்திரவான் (நான்கு இருபது மறுமனையாட்டிகள் - four score concubines) வகுப்பார்களும் இருக்கின்றனர், இந்த இரண்டு வகுப்பார்களிலும் இருக்கிற பிரதிஷ்டை செய்தவர்கள் "**ஒருவராலும் எண்ணக்கூடாதவர்களுமாய் இருந்தனர்.**" (தொகையில்லை வெளி. 7:9) என்று எழுதியுள்ளார்.

சிறுமந்தையினர், எபிஃபெனி காலப்பகுதியில் வாழ்ந்திருந்த [1914-1954] காலத்தில், பிரதிஷ்டை செய்த கர்த்தருடைய ஜனங்களில் - திரள்கூட்டத்தார் மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் என்ற வேறு இரண்டு வகுப்பார்கள் மட்டுமே இருந்து வந்தனர். உன்னதப்பாட்டு 6:9-ஐ, E.Vol.11, பக்கம் 709-ல் விளக்கிக் கூறும் போது, ஜாண்சன் போதகர்: "திரள் கூட்டத்தார், தனிப்பட்டவர்களாகவும், தேவனுடைய குமாரத்திகள் என்ற வகையிலும் (2 கொரி. 6:18), அவளைப் (சிறுமந்தை) பற்றி புரிதலுக்கு வந்தார்கள். குமாரத்திகள் அவளைக் கண்டு, அவளை வாழ்த்தினார்கள் (அவளை ஆசீர்வதித்தார்கள்), 60 திரள்கூட்ட வகுப்பார்களும்கூட (ராஜஸ்திரீகள்) அப்படியே செய்தனர், அப்படியே 80 வாலிபரான பாத்திரவான்கள் வகுப்பாரும் (மறுமனையாட்டிகள்) செய்தனர்; மேலும் அவர்கள் அவளைக் குறித்து மேன்மையாகப் பேசினார்கள், (அவளைப் போற்றினார்கள்) " என்று சொல்லியிருக்கிறார். (E.Vol.10, பக்கம் 274 உடன் ஒப்பிடவும்) தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களில் மூன்று வகுப்பார் இந்த ஜீவியத்தில் தங்கள் ஓட்டத்தை நிறைவு செய்திருக்கிற மூன்று வகுப்பார்களை நாம் கொண்டிருக்கிறோம் - சிறுமந்தை, திரள்கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் ஆகிய இவர்கள் தான் உன்னதப்பாட்டு 6:8,9-ல் சுட்டிக் காட்டப்படுபவர்கள். இது 1954-க்கு முந்திய உபயோகத்தில் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாகும்.

1954 அக்டோபரில் வாலிபரான பாத்திரவான்களுக்கான அழைப்பு முடிவடைந்தது. (E.Vol.10, பக்கம் 114; PT '58, பத்தி 91-93) அதன் பின்பு எபிஃபெனி ஆசரிப்புக் கூடார பாளயம் கட்டி எழுப்பப்படுதல், பிரகாரத்தில் இருந்து தனிப்பட்டதாகத் தொடங்கியது. (PT '59, பக்கம் 56). அந்த காலகட்டம் தொடங்கி, பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் என்று அழைக்கப்படுகிற மற்றொரு

வகுப்பார் ஆயிர வருட யுக ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியில், மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களுக்கு, விசேஷித்த உதவியாளர்களாக ஆயத்தமாக்கப்பட்டு வருகிறார்கள். இவர்கள்தான் "ஆபிரகாமின் ஐந்தாவது வித்தாகிய" குவாசி எலெக்ட் வகுப்பாரில் முதலாவதாக பிரதிஷ்டை செய்பவர்களாவார்கள். (E.Vol.11, பக்கம் 293; E.Vol.12,பக்கம் 185, 188; PT '57, பக்கம் 20-27; PT '70, பக்கம் 59). பின்பு குறித்த காலத்தில் கிறிஸ்துவின் மணவாட்டியின் மறுரூபமாகுதல் நிறைவடைந்து விட்டதிலிருந்து, (பின்வரும் வாக்கியத்தை முன்னேறிவரும் யுகமாறு தலைக் காட்டுவதற்காக நாங்கள் விட்டுவிடுகிறோம்), தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களில் இந்த ஜீவியத்தில் தங்கள் ஓட்டத்தை நிறைவு செய்யும் மூன்று வகுப்பார்கள் - திரள் கூட்டம் (இப்போது நிறைவடைந்து விட்டது), வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் ஆகியோர் இருந்தனர்.

இவர்கள் உன்னதப்பாட்டு 6:8-ன்படி 1954-க்கு பிந்தின பொருந்திப்பார்த்தலில், நம்முடைய கர்த்தராகிய நிறைவேறுதலான சாலொமோனுடன் விசேஷித்த தொடர்புக் குள்ளாக இருக்கிற மூன்று குழுக்களான ஸ்திரீகளால் குறித்துக் காட்டப்படுவதாகத் தெரிகிறது. புது சிருஷ்டிகளாயிருக்கிற திரள்கூட்டத்தார், ராஜ்யத்தின் ஆவிக்குரிய பகுதியில் - சிறுமந்தைக்கு அடுத்த படியாக நிறைவேறுதலான சாலொமோனுடன் மிக நெருக்கமான உறவில் இருக்கிறார்கள்; எனவே அவர்கள் சாலொமோனுடைய ராஜஸ்திரீகளால் குறித்துக் காட்டப்படுவது பொருத்தமாக உள்ளது; இந்த மூன்று வகுப்பார் மத்தியில் இவர்கள் அவருடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர்களாயிருந்தனர். வாலிபரான பாத்திரவான்கள் அடுத்த படியாக நெருக்கமான தொடர்பில் இருக்கிறார்கள்; எனவே அவர்கள், அவருடன் அடுத்தபடியாக மிக நெருங்கிய உறவில் இருந்த சாலொமோனுடைய மறுமனையாட்டிகளில் குறித்துக் காட்டப்படுகின்றனர். பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் அடுத்த படியாக நெருங்கிய உறவில் இருக்கிறார்கள்; ஆகவே அவர்கள் சாலொமோனுடன் திருமண சம்பந்தமான உறவில் இல்லாவிட்டாலும்கூட, அவருடன் அடுத்தபடியாக நெருங்கிய உறவில் இருந்த கன்னிகைகளில் நன்கு குறித்துக் காட்டப்படுகின்றனர்.

அவர்களுடைய நிலை நிற்றல், இன்னொரு விதத்தில், பாளயத்தில் தங்கியிருந்த இஸ்ரயேலர்களால் சித்தரித்துக் காட்டப்படுகிறது, அது பிரகாரத்தில் லேவியர்களால் சித்தரிக்கப்படுகிற திரள் கூட்டத்தார் மற்றும் வாலிபரான பாத்திரவான்களைக் காட்டிலும் தாழ்வான நிலைநிற்றலாயிருக்கிறது. மேலும் திரள்கூட்டத்தார் மற்றும் வாலிபரான பாத்திரவான்களைப் போல CEC வகுப்பினருக்கும் "தொகையில்லை," ஏனெனில் இந்த மூன்று வகுப்பாரில் எவருக்குமே குறிப்பிட்ட எண்ணிக்கையில்லை. மிகவும் ஏற்ற சமயத்தில் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்களை பெலப்படுத்துவதற்காகவும், தேவனுடைய வசனத்தின் மீது நம்மெல்லாருடைய விசுவாசத்தையும் உறுதியாக ஸ்தாபிப்பதற்காகவும் திறந்து கொடுக்கப்பட்ட இந்த சத்தியம் மற்றும் மென்மேலும் இது தொடர்பாக வருகிற நிகழ்கால சத்தியத்துக்காகவும், நாங்கள் தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் நன்றியுடன் துதிக்கிறோம்.

சுவிசேஷ யுகம் முடிந்து, ஆயிரவருட யுகத்தை அறிவிக்கிற, மகா பெரிய நிலைமாறுதல் காலத்தின் போது ஜீவிப்பதும், நம்முடைய நீதியின் ராஜா, தம்முடைய இரண்டாம் வருகையில் பிரசன்னமாகி படிப்படியாக கெம்பீரமாக வந்து கொண்டிருக்கிற சிறப்பை சாட்சி பகருவதும் எவ்வளவு அற்புதமான காரியமாயிருக்கிறது! யேகோவா தேவன் இப்பொழுது முதன்மையாக, பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக் காரர்களுடன், ஆயிரவருட பாளய ஒழுங்குகளின் கீழ் ஈடுபாடு செய்கிறார். நிகழ்காலம் வரை முன்னேறி வருவது பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைக்கு, அவருடைய குமாரர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிற வர்களுக்கு எப்பேற்பட்ட சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொண்டு வருகிறது. (யோவேல் 2:28; ஏசா. 60:4).

பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்களும், அதைப் போலவே வாலிபரான பாத்திரவான்களும், ஜீவ புஸ்தகத்தில் கவனமாக தங்கள் பெயர்களை எழுதுவதும் தங்கள் குணாம்சங்களை எழுதி பதிவு செய்வதும் ஆணையோடு கூடிய உடன்படிக் கையின் பூமிக்குரிய இயல்புகளில் உள்ளடங்கியுள்ள சத்தியம் நீதி மற்றும் பரிசுத்தத்தின் கோட்பாடுகளுக்கு இசைந்திருப்பதும், எவ்வளவு முக்கியமானதாயிருக் கிறது. சீக்கிரத்தில் தொடங்கப் போகிற புது உடன்படிக் கையின் கீழ் தற்கால கடினமான சோதனைகளை வெற்றியுடன் கடந்து செல்கிறவர்கள், சந்தேகமின்றி. தங்களை ஜெயம் பெற்றவர்கள் என்று நிரூபித்துக் காட்டுவதுடன், புது உடன்படிக்கையின் கீழ் அனுமதிக் கப்படுகிற சுலபமான சோதனைகளிலும்கூட ஜெயம் பெற்று நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். அதற்கு, முழுமையான உத்தம குணமும் கீழ்ப்படிதலும் மிகவும் அவசியமாயிருக்கிறது, ஆனால் அவர்கள், அவருடைய "நன்றாகச் செய்தாய்" என்ற பாராட்டைப் பெற்று, தங்கள் ஸ்தானத்தை தக்க வைத்துக் கொண்டு, அவருடைய ராஜ்யத்தில், அவர்களுக்காக, முன்னதாகவே ஆயத்தம் செய்து வைத்துள்ள, விசேஷமான தயவுள்ள இடத்தைப் பெற வேண்டுமானால், தேவன் இப்பொழுது அவர்களுக்கு அனுமதிக்கிற விசேஷமான சோதனைகளின் கீழ் தங்களை உண்மையுள்ளவர்கள் என்று மெய்பித்துக் காட்ட வேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது.

பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்களை வளர்ப்பதற்கு, தேவையான அவசியமான வேலையைக் குறித்து, தேவன் "காணாதவர் போல" இருக்கவில்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். மாறாக, ஆபிரகாமின் ஐந்தாவது வரிசையான இந்த வித்தின் வளர்ச்சிக்குத் தேவையான, முன்னேறிக் கொண்டிருக்கும் சத்தியம் எல்லாவற்றையும் கொடுப்பதில் அவர் மிகவும் கவனமுள்ளவராக இருக்கிறார்.

# விசுவாசத்தின் அவசியமும் அதன் விரும்பத்தக்க தன்மையும்

The Necessity and Desirability of Faith

**"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி. 11:6).**

தேவன் இப்போது உலகத்தை மனந்திரும்பச் செய்ய முயற்சிக்கிறார் என்ற கொள்கையானது அவருடைய வார்த்தையாகிய வேதாகமத்துடன் முரண்பட்டு காணப்படுவது மட்டுமல்லாமல், அவருடைய ஞானம், நீதி, வல்லமை மற்றும் அன்பு ஆகிய குணவிசேடங்களுக்கு எதிராகவும் இருக்கிறது. சர்வஞானமுள்ளவர் (ரோம. 11:33,34), அவருடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஏற்பாடு செய்திருக்கிற பொருத்தமான வேளைகளில் அவருடைய நோக்கங்கள் தவறாமல் நிறைவேற்றப்படுவதற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்; அவருடைய நீதியுடன் பூரண இசைவில் (உபா. 32:4; சங். 89:14) அவர் இந்த யுகத்திலும் ஆதாமுடைய பாவத்திலிருக்கிற சந்ததி மீது, அவருடைய மரணதண்டனையையும், அதனுடன் இணைந்து வருகிற தண்டனைகளையும் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்; சர்வவல்லமையுள்ளவராகிய அவருக்கு, இரட்சிப்பதற்கு 'முயற்சிக்கிறேன்' என்பது போன்ற பலவீனமான வார்த்தை எதுவும் தெரியாது, ஆனால் அவருக்கு சித்தமான யாவையும் வெற்றிகரமாகச் செய்ய முடியும். (சங். 115:3; ஏசா. 46:9-11); சர்வ அன்புள்ள (1 யோவா. 4:8), அவர் தமது ஒரே பேறான குமாரனை உலகத்திற்காக மரிக்கவும், ஆதாமின் கடனைச் செலுத்தவும், இறுதியில் அவனையும் அவனது சந்ததியையும் சாபத்திலிருந்து விடுவிப்பதற்காகவும் கொடுத்தார். (கலா. 3:8; வெளி. 21:1-4; 22:3,17). இறுதியில் வரவிருக்கும் ஆயிரவருட யுகத்தில், அவருடைய பிரதிநிதியான இயேசுவானவர், "**தமது ஆத்தும வருத்தத்தின்** [மனந்திரும்பிய ஓர் உலகமும் அடங்கிய] **பலனைக் கண்டு** [கனிகள்] **திருப்தியடைவார்.**" (ஏசாயா 53:11).

"**பூமியிலுள்ள வம்சங்களெல்லாவற்றிற்கும்**" வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தின் காலமும், உலகத்தை மனந்திரும்பச் செய்வதும் இன்னும் எதிர்காலத்தில் இருக்கிறது (அது விரைவிலே தொடங்கும் என்றாலும்), ஏனென்றால் அந்த ஆசீர்வதிக்கிற வேலையையும், உலகத்தை மனந்திரும்பச் செய்வதையும் நிறைவேற்ற, அவரால் பயன்படுத்தப்படப் போகிற, அவருடைய தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகிய ஆபிரகாமுடைய வித்தை தேர்ந்தெடுப்பதை தேவன் முதலில் செய்து முடிக்கிறார் (ஆதி. 12:2,3; 22:15-18). அவர் சுவிசேஷ யுகத்தை ஒதுக்கி வைத்தது, உலகத்தை மனந்திரும்பச் செய்வதற்காக அல்ல, மாறாக "**தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தை,**" 144,000 பேரை, கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பதற்கு மனுகுலத்திலிருந்து தெரிந்தெடுப்பதற்காகவும், அதன்பிறகு அவர் அவருடைய பிரதான பிரதிநிதியாகிய இயேசுவை திரும்ப அனுப்பி (பொதுவாக மனுகுலத்திற்கான தம்முடைய தயவில்), **மற்ற மனுஷரும்** (உலக மனுகுலத்தில் மீதியானவர்கள் அனைவரும்), **என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும்** (தேசங்களும்), (வரவிருக் கும் ஆயிர வருட யுகத்தில்) **கர்த்தரைத் தேடும்படிக்கு, விழுந்து போன** (யூதாவின் கடைசி ராஜாவாகிய, சிதேக்கியாவின் நாட்களிலிருந்து எசே. 21:25-27)**தாவீதின் கூடாரத்தை, மறுபடியும் எடுப்பித்து கட்டி** (மேசியா ஒரு ராஜாவாக உள்ள ராஜரீகத்திற்கு தாவீதின் குடும்பத்தை மறுபடியும் எடுப்பித்து கட்டி), **அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக** (முழு உலகத்தையும் ஆளுகிற அதிகாரமாக) **நிறுத்துவார்** (அப். 15:14-17). தேவனுடைய நாமம் கிறிஸ்துவின் மணவாட்டியான 1,44,000 பேருக்கு வழங்கப்படுகிறது, ஆனால் இது வேறு விதமாக தெரிந்து கொள்ளப்படாதவர்களை அழைக்கிறது, அதாவது ஆதாமுடைய பூரண மானிட ஜீவனுக்காகவும் (ஒரு பிரதிக்கிரயமாக) மற்றும் அவர் பாவம் செய்தபோது, அவருடைய அரையிலிருந்த முழு மனித சந்ததிக்காகவும், ஒரு மீட்கும் பொருளாக பூரண மானிட ஜீவனை கல்வாரியில் கொடுத்த, தம்முடைய ஒரே பேறான குமாரனை கொடுத்ததின் மூலம், அவர் ஏற்படுத்தியிருக்கிற மீட்கும் பொருள் கிரயத்தின் புண்ணியத்தால் தம்முடைய சொத்தாக அவர்களை ஆக்கிக் கொண்டார். (உபா. 19:21; ரோம. 5:12,19).



விசுவாசம் நீதியைக் கொண்டுவருகிறது. கலா.3:1-5

ஆபிரகாமின் வித்தாக விசுவாசத்தின் பிள்ளைகள் இருக்கிறார்கள்: "**ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக,**" மேலும் "**அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.**" (கலா. 3:7,9). தேவனுடைய மனதுடன் இசைவிணக்கமுமாய் இருப்பதற்கு விசுவாசம் அவசியம் என தேவனுடைய வார்த்தை அறிவிக்கிறது; மேலும் விசுவாசம் இல்லாமல் வேறெந்த வழியிலும் தேவனுடன் சமாதானமாயிருந்து அவரைப் பிரியப்படுத்துவது கூடாத காரியமாக இருக்கிறது என்பதைப் பார்க்கும் போது இந்த தேவையின் நியாயத்தன்மை தெளிவாகக் காணப்படும். சகலமும் இயேசுவுக்குள்ளே கூட்டப்பட வேண்டும் என்பதற்காக யுகங்களைப் பற்றிய மகத்தான ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டதைப் போலவே விசுவாசமானது அதன் எளிமையில் அழகாக இருக்கிறது. (எபே. 1:9).

## மனந்திரும்புதலும் விசுவாசமும்

விசுவாசத்தின் மூலம் தேவனிடத்தில் வருவதற்கு ஒருவர் எடுத்துவைக்கும் முதல்படி அவர் உண்டென்று நம்புவது; ஒருவர் தேவன் இருக்கிறார் என்று கூட நம்பாத ஒருவர் எப்படி அவரிடத்தில் வருவதைத் தொடங்க முடியும்? நாஸ்திகர்கள் தேவன் ஒருவர் இருக்கிறார் என்று நம்புவதில்லை, ஆகவே அவரை நாடித் தேடுவதில்லை, "**ஒருவேளை அவர்கள் தேடினால்**




**...அவரைக் கண்டுபிடிக்கலாம்."** அவர்களுடைய குருட்டாட்டத் - திலும், சுயதிருப்தியிலும், முன்கூட்டியே தப்பெண்ணம் கொள்ளுதலினாலும் மற்றும் மனம் மழுங்கி இருப்பதாலும் மந்தத்தன்மையினாலும், ஒவ்வொரு விளைவுக்கும் ஒரு காரணி இருப்பதையும், ஒவ்வொரு சிருஷ்டிக்கும் ஒரு சிருஷ்டிகர் இருக்கிறார் என்பதையும், மேலும் உண்மையில் நமக்கு எப்பக்கத்திலும், மிக அருகிலும் இருக்கிற அவருடைய சிருஷ்டிப்பின் கிரியைகளிலுள்ள ஆச்சரியமான ஒழுங்கு, வடிவமைப்பு போன்றவற்றிலும் தேவன் வெளிப்படுத்தப்படுகிறார் என்பதையும், "**ஏனெனில் அவருக்குள்** [அவரால்] **நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்**" (அப். 17:27,28) என்பதையும் போதுமான அளவு பார்ப்பதற்கு அவர்கள் கவனமாக பகுத்தாராய மாட்டார்கள். ஒரு மூடன் மட்டுமே தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை மறுப்பான். "**தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்.**" (சங். 14:1).

தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை நம்பினதும், அடுத்த படியாக அவரிடத்தில் வருவதற்கு விரும்ப வேண்டும். மனித சந்ததியானது, தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமை மற்றும் வீழ்ச்சியின் காரணமாக, தேவனுடனான ஐக்கியத்தை இழந்து, மேலும் சுபாவத்திலும் "**நம்பிக்கையில்லாதவர்களும் இவ்வுலகத் தில் தேவனற்றவர்களுமாயிருந்து**" (எபே. 2:12) அவருடைய கோபாக்கினைக்கும் சாபத்திற்கும் கீழிருக்கிறார்கள். தேவனி-டத்தில் திரும்ப வருவதற்கும், அவருடன் நமது சிருஷ்டிகராகவும், நன்மை செய்கிறவராகவும், பிதாவாகவும் ஆதாம் ஆதியிலே தேவனுடைய குமாரனாக (லூக். 3:38) கொண்டிருந்தது போல், மீண்டும் ஐக்கியம் கொள்ள விரும்புவது, மனித இருதயத்தின் சரியான ஆழ்ந்த விருப்பமாயிருக்கிறது. (லூக். 15:18,19). தேவன் பரிசுத்தராயிருக்கிறார்; அவர் பாவத்தை அங்கீகரிக்கவோ அல்லது பாவத்துடன் ஐக்கியம் கொள்ளவோ முடியாது (ஆபகூக் 1:13). ஆனால் அவருடைய இரக்கத்தினால், விழுந்து-போன நிலையிலுள்ள மனுகுலத்திற்காக, அவர் இறுதியில் "**நியாயக்கேடெல்லாம் தன் வாயை மூடி,**" பாவமும், பாவிகளும் இல்லாமல் போகும் போது, "**மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்: அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருக்கும்**" (சங். 107:42; ஏசாயா 65:17; 66:22; 2 பேது. 3:13; வெளி. 21:3,4) போது, "**திரும்பக் கொடுத்தலின் காலங்களில்**" (அப். 3:19-23) படிப்படியாக வருகிற முழுபலனாகிய மீட்பின் மூலமாக அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவிப் பதற்கான ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்.

அதே சமயத்தில் பாவத்திற்காக மனந்திரும்பி, அவரிடத்தில் திரும்பி (அப். 26:20; 20:21; ரோம. 2:4), விசுவாசித்து (அப். 13:39), மேலும் "**விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறவர்களை**" (ரோம. 5:1) மீண்டும் ஐக்கியத்திற்குள்ளே ஏற்றுக்கொள்வதற்கு தேவன் பிரியமாயிருக்கிறார்; இயேசு அனைவருக்காகவும் மரித்ததினால், அவரிடத்தில் மையமாக உள்ள விசுவாசத்தில், நம்முடைய இரட்சகராக அவரை ஏற்றுக் கொள்வதற்காக, அவர் அவர்களுக்கு அளித்த இரட்சிப்பை அவர்கள் விசுவாசத்தினாலே ஏற்றுக் கொள்கிறார்கள். (ரோம. 3:26; 5:9). இயேசுவே நல்ல மேய்ப்பன், அவர் நமக்காக தனது ஜீவனைக் கொடுத்தார். (யோவா. 10:11), "**நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்**" (யோவா. 10:9); "**நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்: என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்**" (யோவா. 14:6) என்று சொன்னார். "**அவராலேயன்றி வேறொரு வராலும் இரட்சிப்பு இல்லை: நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை:**" (அப். 4:12). "**கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்.**" (எபே. 2:8).

விசுவாசத்தில் உண்மையான இரட்சிப்பின் புண்ணியம் என்று ஒன்றுமில்லை; இது நீதியும் அல்ல; அல்லது இது நம்மை நீதிமானாக்காது; ஆனால் விசுவாசத்தின் மூலம், அதாவது அதின் கருவியாகச் செயல்படுவதின் மூலம் நாம் நீதிமானாக்கப் படுகிறோம், மேலும் இது "**நீதியாக எண்ணப்படும்**" (ரோம. 4:5). ஓ, தேவனுக்கு முன்பாக இயேசு கிறிஸ்துவின் மூலம் நீதிமானாக்கப்படுவதற்காக விசுவாசம் அவசியமாயிருக்கிறது, சுவிசேஷ யுக விசுவாசிகள் சார்பாக, மீட்கும் பொருள் பலியின் புண்ணியம் சாட்டுதல் செய்யப்படும் போது அவர்களுடைய நீதிமானாக்கப்படுதல் உயிரூட்டமுள்ளதாகிறது. (எபி. 7:25; 9:24; ரோம. 8:33,34).

விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டு, "**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம்**" பெற்றிருக்கிறவர்கள், அடுத்தபடியாக கிறிஸ்துவின் நீதியைப் பற்றிய அறிவிலும், மதித்துப் பாராட்டுவதிலும் அதற்கு இசைவாகவும் வளர வேண்டும். - அத்துடன் தேவனுடைய வார்த்தையினால், மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான அசுசி நீங்க நம்மை சுத்திகரிப்பது சம்பந்தமாக எடுத்து வைக்கப்பட வேண்டிய மற்றொரு படியும் இது தொடர்பாக இருக்கிறது. (2 கொரி. 7:1; எபே. 5:26). இந்த படிகள் அனைத்தும் நம்மை தேவனிடம் கிட்டி சேர வைக்கின்றன, ஆனால் இவை உண்மையில் நம்மை அவருடையவர்களாகவும், அல்லது நம்மை கிறிஸ்துவின் சீஷர்களாகவும் ஆக்குவதில்லை.

## யேகோவா தேவனிடம் அர்ப்பணிப்பாயிருத்தல்

தேவனிடத்தில் பிரதிஷ்டை செய்வது அல்லது அர்ப் பணிப்பு செய்வது அவசியமாக இருக்கிறது. நாம் விசுவாசத் தினால் நீதிமான்களாக்கப்பட்டு, தேவனிடத்தில் சமாதானத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு அறிவிலும், கிருபையிலும் சரியானபடி நாம் வளரும்போது, "தேவனுடைய இரக்கங்களாக" தேவனிடத் திலிருந்து நாம் பெறுகிற மிகப் பெரிய தயவுகள் விசுவாசத்தையும், அன்பையும், "**அன்பினால் கிரியை செய்கிற விசுவாசத்தையும்**" நம்மிடத்தில் அதிகமதிகமாக எழுப்புகின்றன. (கலா. 5:6). ஆகவே இயேசுவானவர் செய்தது போல (சங். 40:8; எபி. 10:7)




நம்முடைய சொந்த சித்தங்களை விட்டு விடுவதற்கும், நமது ஜீவியங்களை அடக்கியாளும் சக்தியாக நம்முடைய சொந்த சித்தத்திற்கு அல்லது மற்றவர்களுடைய சித்தத்திற்கு பதிலாக (மத். 10:37; லூக். 14:26). தேவனுடைய சித்தத்தை நம்முடைய சொந்த சித்தமாக ஏற்றுக் கொள்ளுவதற்கும் நாம் தூண்டப் படுகிறோம். இந்த முக்கியமான படி நீதி. 23:26; ரோம. 12:1; மத். 16:24; மாற். 8:34 -லும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த படியானது தேவனுடனான இரண்டாவது மாபெரும் தய-வாகிய - குமாரத்துவத்தின் சிலாக்கியத்திற்குள்ளாக - "**நாம் இந்த** [இரண்டாவது] **கிருபையில் நிலைகொண்டிருப்பதற்கும்**" நம்மைக் கொண்டு வருகிறது. மேலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மீட்கும் பொருள் பலியின் மூலமாக உண்டான விசுவாசத்தினால் இதற்குள் பிரவேசிக்கிறோம். (ரோம. 5:2). இந்த நிலையில், நாம் "**தேவனிடத்தில் சமாதானம்**" என்ற தொடர்ந்தேர்ச்சியான ஆசீர்வா தங்களை மட்டுமல்ல, மேலும் கிறிஸ்துவின் மூலம், நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் ஆளுகை செய்யும் "**தேவ சமாதானத்தையும்**" நாம் பெறுகிறோம். (கொலோ. 3:15; பிலி. 4:7).

விசுவாசத்தில் இந்த படிகளை எடுத்துவைத்த தேவனுடைய பிரதிஷ்டை செய்த குமாரர்கள் (யோவா. 1:12; 1 யோவா. 3:1) பரலோக பிதாவுடனும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுடனும் வேறு எவரும் அனுபவிப்பதற்கு முடியாத சிலாக்கியமாகிய ஒரு நெருங்கிய ஐக்கியத்தைக் கொண்டிருப் பார்கள் (1 யோவா. 1:3,6,7). மேலும் அவர்கள் "**தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்**" என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறினதை உணருவார்கள். (யாக். 4:8). அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷ யுக சபைக்கு கூறும்போது தேவன் "**கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்: இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு**" என்று கூறுகிறார். (எபே. 2:6-8). இவை அனைத்தும் விசுவாசத்தின் எல்லைக்குள்ளே வருகிறது.

தேவனுடைய உயர்ந்த வெகுமதிகள் விசுவாச வகுப்பாரை சேர்ந்த அவருடைய பிள்ளைகளுக்காக இருக்கின்றன. "**தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை**" (1 கொரி. 2:9). இருந்தபோதிலும், இயேசு சபையின் பாவங்களை மட்டுமல்ல, ஆனால் "**சர்வலோகத்தின் பாவங்களையும்**" நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக இருக்கிறார்; அவர் "**ஒவ்வொருவருக்காகவும்**" மரணத்தை ருசிபார்த்தார். (1 யோவா. 2:2; எபி. 2:9). இப்போது சபையினுடைய நியாயத்தீர்ப்பு நாள் (1 பேது. 4:17); ஆனால் தேவன் "**மேலும் ஒரு நாளைக்** [ஆயிர வருடம் கொண்ட நியாயத்தீர்ப்பு நாள்- 2 பேது. 3:7,8] **குறித்திருக்கிறார்: அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனை** [இயேசு கிறிஸ்துவை] **கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்: அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்.**" (அப். 17:31).

காலக்கணக்கு மற்றும் நிறைவேறிக் கொண்டிருக்கிற தீர்க்கதரிசனத்தின் மூலமான வேத வசனங்கள் காலங்களின் அடையாளங்களினால் நிரூபிக்கப்பட்டபடி, சுவிசேஷ யுகமானது [அதனுடைய குறுகிய கருத்தில்] முடிந்துவிட்டது என்பதைக் காட்டுகிறது; இருந்த போதிலும் விரிவாக்கப்பட்ட அறுவடை வேலையின் அம்சங்கள் தேவனுடைய திட்டத்திலுள்ள ஆயிர வருட யுகத்தின் அம்சங்களின் விடியலிலும் தொடர்கிறது. விரைவிலே, தேவனுடைய குறித்த காலத்தில், கிறிஸ்துவின் ஆயிர வருட யுக மத்தியஸ்த அரசாட்சி பூமியில் ஸ்தாபிக்கப்படும். சாத்தானுடைய ராஜ்யம் முற்றிலுமாக கவிழ்த்துப்போடப்படும், மேலும் கிறிஸ்துவினுடைய ஆயிர வருட நீதியின் அரசாட்சி பூமியில் ஸ்தாபிக்கப்படும் (ஏசாயா 26:9; வெளி. 20:1-6).

அப்போது தெரிந்து கொள்ளப்படாத உலக மனுக் குலத்தாரில் இன்னும் ஜீவனுக்குரிய ஒரு பரீட்சையைப் பெறாமல் மரித்தவர்கள் அவர்களுடைய மரண நித்திரையிலிருந்து விழித்தெழுப்பப்பட்டு, நித்திய ஜீவனுக்குரிய அவர்களுடைய பரீட்சையாகிய அவர்களுடைய நியாயத்தீர்ப்பை அடைய வருவார்கள். (தானி. 12:2; யோவா. 5:28,29; வெளி. 20:12,13). "**அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்: அது பரிசுத்த வழி என்னப்படும்: தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை: அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந் தாலும் திசை கெட்டுப்போவதில்லை. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்: நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்: சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்: சஞ்சலமும் தவிப்பும் ஒடிப்போம்.**" (ஏசாயா 35:8,10).

அப்போது "**சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்,**" மேலும் கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியின் போது சாத்தான் கட்டப்பட்டிருப்பதால், அவன் உலகத்தை மேலும் மோசம் போக்க முடியாது, தெரிந்து கொள்ளப்படாதவர்கள் அனைவருக்கும் மெய்யான வெளிச்சம் அளிக்கப்படும்; மேலும் இறுதியில் அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் கர்த்தரை அறிந்து கொள்வார்கள். (ஏசாயா 11:9; யோவா. 1:9; 1 தீமோ. 2:4; வெளி. 20:2; எரே. 31:34).தேவன் விசுவாசத்தைக் கொண்டிராத வகுப்பாராகிய உலகத்திற்கும் (2 தெச. 3:2) அதே போல் விசுவாச வகுப்பாராகிய சபைக்கும் இரட்சிப்பையும், நித்திய ஜீவனுக்கான ஒரு பரீட்சையையும் அளித்திருக்கிறார்.

அவர்களுடைய நியாயத்தீர்ப்பு நாளில் உலகத்தார் விசுவாசிப்பதை விட அதிகமாக தரிசித்து நடப்பார்கள், இருந்த போதிலும் இன்னும் விசுவாசத்தை வளர்த்துக் கொள்வதும், பயிற்சி செய்வதும் அவர்களுக்கு அவசியமாக இருக்கும்; ஏனென்றால் தேவன் உண்டென்றும் அவர் தம்மை ஜாக் கிரதையுடன் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் அவர்களும் கண்டிப்பாக விசுவாசிக்க வேண்டும். விசுவாச-

மில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஆனாலும், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாமின் விசுவாசத்தின் அடிச்சுவடுகளில், தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறவர்களுக்கு இப்போது தேவைப்படுவதைவிட உலகத்தின் பங்கில் குறைவான அளவு விசுவாசமே தேவைப்படும். (2 கொரி. 5:6; ரோம. 4:12). இப்போது விசுவாசத்துடன் நடக்கிறவர்களுக்கும், அவர்களுடைய எல்லா வழிகளிலும் விடாமுயற்சியுடன் அவரைத் தேடுகிறவர்களுக்கும், தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிற மாபெரும் சிலாக்கியங்களை விசுவாசித்து, பெற்றிருக்கிற நாம் தேவனுடைய ஜனங்களுக்கு வரவிருக்கும் அந்த நித்திய இளைப்பாறுதலில் நாம் பிரவேசிக்கும் வரை எப்போதும் அவருக்குள் இளைப்பாறுதலைக் கண்டடைகிறவர்களாக அவருடைய பரிசுத்த சித்தத்தைக் கற்று, அதைச் செய்ய ஊக்கமாக முயற்சிப்போமாக. "**விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம் ...ஆகையால் தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப் பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல, தானும் தன்னுடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். ஆகையால், அந்த திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம்.**" (எபி. 4:3,9-11).

## காத்திருக்கும்போது உற்சாகமாயிருத்தல்

"திடன் கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள்" (மாற். 6:50). கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள் யாவரும் வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் தெளிந்தபுத்தியுள்ளவர்களாகவும், ஊக்கமுள்ளவர்களாகவும், மிதமானவர்களாகவும் இருக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. இதனால், அவர்கள் வருத்தந்தோய்ந்த முகத்துடனும், இருண்ட அல்லது மனச்சோர்வடைந்த தோற்றத்துடனும் இருக்க வேண்டும் என்பதை அர்த்தப்படுத்துகிறது என்று நினைப்பது தவறு. முற்றிலும் மாறாக, தேவன் மீதும் அவருடைய வார்த்தையின் மீதும் முழு விசுவாசமுள்ளவர்களும், அவருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் இருதயத்தில் முழு பிரதிஷ்டையோடு யாரெல்லாம் இருக்கிறார்களோ, அவர்கள் விரும்பமற்ற, திருப்தியற்ற மற்றும் கஷ்டமான நிலைமைகள் மத்தியிலும்கூட மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருக்கிறார்கள் என்று வேதவாக்கியங்களில் உள்ள அனைத்தும் நமக்குத் தெரிந்த உண்மை செய்திகளுடன் ஒத்திருக்கின்றன. அவர்களின் முகங்கள் வழக்கமாக அவர்களுடைய இந்த இருதயத்தின் உற்சாகத்தைக் காட்டுகின்றன என்பதும் உண்மைதான். அவர்கள் குறைவான கவலை மற்றும் பதற்றமான தோற்றத்தையும், குறைவான பயம் மற்றும் தீமையின் அறிகுறியையும் கொண்டுள்ளனர். கர்த்தருடனான அவர்களின் உறவு மற்றும் அவருடைய பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுதல் போன்றவற்றின் விளைவாக ஏற்படும் சமாதானம் மற்றும் மகிழ்ச்சியின் நிறைவு அவர்களின் குரல் தொனியில் மட்டுமல்லாமல், கணநேர கண்ணோட்டத்திலும் காணப்படுகின்றன. இது ஒரு தீவிரமான மாற்றத்தின் விளைவாக இருந்தால் படிப்படியாக, சுருக்கங்களும், கவனிக்கக்கூடியதான பிற அடையாளங்களும் சில நேரங்களில் மங்கத் தொடங்கும் என்றாலும் அவை முழுமையாக மறைந்து விடாதிருக்கலாம்.


இருந்த போதிலும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. நாம் வெறுமனே பெயரளவிலான கிறிஸ்தவர்களை விவரிக்கவில்லை. மாறாக, தங்கள் கர்த்தரையும் அவருடைய வார்த்தைகளையும் அறிந்தவர்களும், அவரால் அறியப்பட்டவர்களும், இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதாக அவர்களாகவே உறுதியளித்தவர்களும், தினந்தோறும் பாரமான யாவற்றையும், தங்களைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, தங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்திலே பொறுமையோடு ஓடுகிறவர்களுமான கிறிஸ்தவர்களின் மிகச் சிறப்பான வகுப்பாரை நாங்கள் விவரிக்கிறோம். (எபி. 12:1). இதற்கு மாறாக, பெரிய தேவாலய கட்டிடங்களில் நடக்கும் மத வழிபாடுகளில் ஒருவர் கலந்து கொண்டு, அங்கே அவர் சந்திப்பவர்களின் முகங்களைக் கூர்ந்து கவனித்தாரானால் வழக்கமாக அவைகள் மீது பாவம், கவலை, துக்கம், பயம், வலி மற்றும் பிரச்சனைகளுக்குரிய பல்வேறு அடையாளங்களைக் காணலாம். உண்மையாகவே, நாம் இப்போது விவரித்துள்ள வகையைச் சேர்ந்தவர்களில் மிகச் சிலரே தேவனுடைய சமாதானத்தை உடைமையாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் இருதயங்களையும், மனங்களையும் ஆளும் எல்லா புத்திக்கும் மேலான அந்த சமாதானம் அவர்களின் முகங்களில் தன்னைக் காட்டுகிறது.

சோதனைகள், பரீட்சைகள் மற்றும் கஷ்டங்கள் மத்தியிலும்கூட, நம்மில் சொல்லி முடியாத, சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர முடிந்தவர்கள், நிச்சயமாக கர்த்தர் இந்த வசனத்தில் குறிப்பிடும் வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். "**திடன் கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள்.**" பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகள் இந்த சத்தத்தைக் கேட்டு, அதைப் பேசியவருடனும், அவருடைய வார்த்தைகளுடனும் ஒத்திசைவுக்கு வருவதால் எல்லா சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளின் கீழும் களிகூருவதற்கான காரணத்தைக் காண்கிறார்கள்.

## அறிவு மற்றும் உணர்ச்சி

தேவனுடைய வார்த்தையை ஆழமாகப் படித்தறியக்கூடிய மாணாக்கர்கள், கூர்மையான பகுத்தறிவாளர்கள், வேதாகமத்தின் பல காரியங்களை விளக்கக் கூடியவர்கள் என்று தங்களை உரிமைப்பாராட்டிக் கொள்ளும் சில கிறிஸ்தவர்களிடம் ஏதாவது அன்பின் பேரார்வமும் அல்லது கிறிஸ்தவ அனுபவத்தின் ஆழமான உணர்ச்சிகளும் சிறிதளவு இருந்தாலும், அது மிகச் சாதாரணமானதாகவும், குளிரானதாகவும் தெரிகிறது. மற்றொரு புறத்தில் உணர்ச்சிபூர்வமான மதக்கூட்டத்தில் கலந்து கொண்டு, மற்றவர்களுடன் சேர்ந்து கைகளை அசைத்து, அல்லேலூயா, தேவனுக்கு மகிமை என்றெல்லாம் கூப்பிடுகிற ஓரளவு உணர்ச்சியுள்ளவர்களாக, உணர்வுகளை வெளிக்காட்டுகிற சிலரை நாம் சந்திக்கிறோம். அவர்கள் தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதிலும் அல்லது கற்றுக்கொள்வதிலும், குறிப்பாக ஆழமான அம்சங்களைக் கற்றுக்கொள்வதில் சிறிதும் அக்கறை காட்டாதவர்களாயிருப்பதாகத் தெரிகிறது. சிலர், குறிப்பாக புதிய விசுவாசிகள் இந்த மாறுபட்ட பல வகைகளான கிறிஸ்தவர்களென்று கூறுகிறவர்களைக் குறித்து அறிந்து கொள்ளும் போது, கிறிஸ்தவனாகப் பின்பற்றுவதற்கான சரியானவழியைப் பற்றி குழப்பமடைகிறார்கள்.

சாத்தான் ஒரு தீவிரவாதியாக இருக்கிறான். "**அறிவை மட்டுமே உபயோகித்து உணர்வற்றவர்களாகவும்**" அல்லது




**“உணர்வை மட்டுமே உபயோகித்து அறிவற்றவர்களாகவும்,”** இருப்பது போன்ற பல்வேறு தவறான வழிகளில் கிறிஸ்தவர்களை வளரச் செய்வதின் மூலம் சரியான பாதையிலிருந்து திசைதிருப்ப அவன் விரும்புகிறான். அநேக கிறிஸ்தவர்களுடன் அவன் வெற்றியும் பெறுகிறான். அவர்களை ஏதாவது ஒரு திசையிலோ அல்லது மற்றொரு திசையிலோ அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தீவிரமாயிருப்பவர்களாகச் செய்கிறான். கிறிஸ்தவன் மிதமானவனாகவும் தெளிந்த புத்தியும் உள்ளவனாகவும், தெளிந்த எண்ணமுள்ளவனாக சிந்திக்கவும் வேண்டும், (ரோம. 12:3; பிலி. 4:5), உன்னைக் குறித்தும், தன் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிருந்து (1 தீமோ. 4:16), தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலை கொண்டிருக்க வேண்டும். (1 தீமோ. 2:15).

ஒரு புறம், சிலர் ஆற்றலுடன் சொற்பொழிவாற்றும் வரம் பெற்றவர்களாகவும், இரகசியங்களை அறிந்து கொள்ளக் கூடியவர்களாகவும் அதிக அறிவைப் பெற்றவர்களாகவும் இருக்கலாம். ஆனால் ஆவியின் கிருபைகளில் வளர்வதை, குறிப்பாக அன்பில் வளர்வதைப் புறக்கணிக்கிறார்கள். தேவனுடைய மதிப்பீட்டில் அவர்கள் “ஒன்றுமில்லை.” (1 கொரி. 13:2). இன்னொரு புறம் சிலர் அதிகமான உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறார்கள், “மேடைகளின் மேலும் கீழும் குதித்து ஆடுகிறார்கள்.” (1 ராஜா. 18:26-மார்ஜின்). தங்கள் வாயினால் அவரிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் அவரைக் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ அவருக்கு தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் அவருக்கு ஆராதனை செய்கிறார்கள்.(மத். 15:8,9). மேலும், தேவனுடைய வார்த்தை-யின் சத்தியங்களை கவனமாக கற்றுக்கொள்ள எதிர்ப்பதும், மறுப்பதும், குறிப்பாக, ஆழமான அம்சங்களை அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவரும் பொழுது அதை ஏற்க மறுப்பதும் கர்த்தருக்கு சினமூட்டுகிறதாயிருக்கின்றன.

நாம் அறிவில் பலவீனமாகவும், வளர்ச்சியடையாமலிருப்பதையும் தேவன் விரும்புவதில்லை.(1 கொரி. 13:11; 14:20; எபே. 4:13,14; கொலோ. 1:9,10; எபி. 5:12-14; 6:1,2; 2 பேது. 1:5, 8-11; ஓசியா 4:6; 6:6). அவருடைய வார்த்தைகள் மற்றும் அவருடைய திட்டம் போன்றவற்றை அறிகிற அறிவில் வளர்ச்சி-யடைவதைக் குறித்து தேவன் மிகவும் மகிழ்ச்சியடைகிறார். நாம் தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவும், வெட்கப்படாத ஊழியக்காரனாகவும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாகவும் நம்மை தேவனுக்கு முன்பாக உத்தமமானவர்களாக நிலைநிறுத்தும்படி அறிவுறுத்தப் படுகிறோம். (யோவா. 5:39; அப். 17:11;2 தீமோ. 2:15) **“ நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய்த்து, உன் இருதயத்தைப் புத்திக்கு அமையப்பண்ணும் பொருட்டு, ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியை சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப் போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில், அப்பொழுது கர்த்தருக்கு பயப்படுதல்** [பயபக்தி] **இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய். கர்த்தர் ஞானத்தைத் தருகிறார். அவர் வாயினின்று** [வேதாகமம்; வேதாகமத்தின் மூலம் அவர் பேசுகிறார்] **அறிவும் புத்தியும் வரும்.** (நீதி. 2:2-6-ஐ; நீதி. 3:13-18; 4:4-9; யாக். 1:5,6; 3:17,18-உடன் ஒப்பிடவும்) இவற்றிலிருந்தும், இன்னும் அநேக வேதவாக்கியங்களிலிருந்தும், அறிவு இன்றியமையாதது என்பதைக் காண்கிறோம். அது ஒருபோதும் வெறுக்கப்படக் கூடாததாய் இருக்கிறது.

ஜாண் வெஸ்லி அறிவில் வளர்ச்சியடைவதைப் புறக்கணிக்க வில்லை. ஆனால் அவரது காலத்தில் இருந்த பலரும் அந்த அறிவை அசட்டை பண்ணினார்கள். மேலும் இன்றைய நாட்களில் சிலர் செய்வது போல தங்கள் அறியாமையைப் பெருமையாகக் கருதினர். ஒருநாள் அறிஞர் வெஸ்லியின் அதிருப்தி உறுப்பினரான ஒரு பார்வையாளரிடமிருந்து ஒரு கடிதம் அறிஞராகிய வெஸ்லிக்கு வந்தது. அந்த எழுத்தாளர் சொன்னது,

“நீங்கள் கிரேக்கமும், எபிரேயமும் அறிந்திருந்தாலும், உங்களின் புத்தக ‘Larnin’ (படிப்பு) இல்லாமல் கர்த்தரால் அதைச் செய்ய முடியும் என்று உங்களுக்கு எழுதும்படி அவர் என்னை வழிநடத்தினார்.”

ஜாண் வெஸ்லி தனது விமர்சகருக்கு பதிலளித்தார்! “உங்கள் கடிதம் கிடைத்தது,” இது தேவைக்கு அதிகமானது என்று நான் சொல்லலாம், ஏனெனில் என்னுடைய ‘Larnin’ (படிப்பு) இல்லாமல் தேவன் அதைச் செய்ய முடியும் என்று ஏற்கனவே அறிந்திருந்தேன். உங்களிடம் சொல்லும்படி கர்த்தர் என்னை வழிநடத்தவில்லை என்றாலும் உங்கள் அறியாமையும் தேவனுக்கு தேவையில்லை என்று என் சொந்த கடமையின் பேரில் சொல்ல விரும்புகிறேன்.”

## தகாத சர்ச்சைக்குரிய கடிதத்திற்குரிய பதில்

“அரிதான சில விதிவிலக்குகள் இருந்தாலும், தகாத, திட்டுகிற, குற்றம் காண்கிற மற்றும் சர்ச்சைக்குரிய கடிதங்களுக்கு பதிலளிக்கக் கூடாது என்ற எங்கள் விதிமுறையை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்துகிறோம். உதாரணமாக: சில மாதங்களுக்கு முன்பு ஒரு கொழித்தல்காரி எங்களுக்கு ஒரு கடிதம் எழுதினாள். நாங்கள் அவளை எப்படி நடத்தினோம்? நாங்கள் மௌனம் என்ற ரொட்டியை எடுத்து, அதில் ஒரு பெரிய துண்டை வெட்டி அவளிடம் கொடுத்தோம். அத்தகைய எழுத்தாளர்களுக்கு நம்மால் உதவ முடியும் என்ற ஒரு சிறிய நம்பிக்கை இருப்பதாக நாங்கள் நினைத்தால்கூட நாம் அவர்களுக்கு பதிலளிப்போம். ஆனால், அத்தகைய நம்பிக்கையை நாம் காணாவிட்டால், அவற்றை மேலும் சமாளிக்க கர்த்தரிடம் விட்டு விடுகிறோம்.” போதகர் பால். S. L. ஜாண்சன்.

உணர்ச்சிவசமான நிலைக்கு தரம் தாழ்த்தப்பட்ட அன்பானது, மன உணர்ச்சி வசப்பட்டநிலையில் - மனக்கிளர்ச்சி -யில் மற்றும் இருதயத்தில் தன்னை வெறுமையாக வெளிப்படுத்துவதால் நன்மையைவிட அதிக தீமையையே விளைவிக்கலாம். மக்கள் தங்களுடைய கிறிஸ்தவ

அனுபவத்தில் உண்மையான நம்பிக்கையும் உறுதியும் உள்ள இடத்திற்கு வருவதைத் தடுப்பதற்கு பிசாசின் மிகப்பெரிய ஆயுதங்களில் ஒன்றாக "உணர்ச்சி" இருப்பதாகத் தோன்று கிறது. சாத்தான் மக்களிடம் "உணர்ச்சியை" நாடித் தேடச்செய்து, அவர்களை சரியான பாதையிலிருந்து தூக்கியெறிகிறான். விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட வேண்டுமேயல்லாமல் உணர்ச்சியால்/உணர்வால் அல்ல. அது ஒரு அனுபவத்தைத் தேடுவதால் அல்ல, ஆனால் ஒரு நபரை ஏற்றுக் கொள்வ தினாலாகும். விசாரித்தறியும் மனதையும், தேடும் இருதயத் தையும் பிசாசானவன் ஏதோ ஒரு உணர்ச்சி வசமான அனுபவத்தை அனேகமாக மிகுதியான ஒரு பரவசநிலை, ஒரு உணர்ச்சி சிலிர்ப்பு கட்டுப்படுத்த முடியாத இருதயம் மற்றும் மனதின் நிலைமையையும், "ஆவியில் நடனமாடுதல்" போன்ற வற்றையும் அடைய போராட வைக்கும் வரை அவர்கள் மனந்திரும்புதல், விசுவாசம், தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்தல், தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தைப் படித்தல் போன்றவற்றோடு, அதன் ஆழமான அம்சங்கள், எதை நம்புவது மற்றும் ஏற்றுக்கொள்வது என்பதையும், அதன் மூலம் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதையும், பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்பதையும் (யோவா. 8:32; 17:17), அறிவதற்கான தேவனுடைய வார்த்தையின் ஆச்சரியமான ஒளியை அறிய முடியாத அளவிற்கு குருடாக அந்த ஆத்துமாவை அவன் இருளில் வைத்திருக்க முடியும். (1 பேது. 2:9).

அத்தியாவசியமான, தகுதியான உணர்ச்சி, நிச்சயமாகவே கிறிஸ்தவ வாழ்க்கையில் அதன் சரியான இடத்தைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருதயப்பூர்வமான மதமும் "அனுபவ அடிப்படையிலான இரட்சிப்பும்" கொண்டிருக்க வேண்டும். பரிசுத்தமான செட்டைகளின் மேல் ஏறி, ஊக்கமான உணர்ச்சிகளை ஒரு போதும் வெளிப்படுத்தாத ஆத்துமா, தெய்வீக நற்குணம் மற்றும் இரக்கம் மற்றும் தேவனுடன் ஒருவனுடைய உறவின் உணர்வினால் அதன் ஆழங்களில் ஒரு போதும் தூண்டப்படவில்லை, இன்னமும் குமாரத்துவ உறவின் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையை ஒருபோதும் அனுபவிக்கவில்லை. ஒரு ஏற்றுக் கொள்ளும் தந்தையின் உண்மையான மகன் இயல்பாகவே மென்மையான உணர்ச்சியின் உற்சாகத்தை அனுபவிக்கிறான். குறிப்பாக இது இவ்வாறு உண்மையான தேவனுடைய மகன் தன்னுடைய பரலோக தகப்பனுக்குள் ஒவ்வொரு கிருபையின் பரிபூரணமும் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலான மகிமை மகுடமாக விளங்குவதையும், கண்டுணர்ந்த வனாய் அவருடன் நெருங்கிய உறவிலும் ஐக்கியத்திலும் வாழ்பவனாகவும், தேவனுடைய அன்பு மற்றும் அங்கீகாரத் திற்குத் தம்மில் நிலையான சாட்சியைக் கொண்ட மகனாகவும் இருக்கிறான்.

நம்மில் அனைவருக்குமே உணர்வெழுச்சிகள் உள்ளன. ஒவ்வொரு மனிதனும் ஒரு உணர்ச்சிப்பூர்வமான உயிரினம் தான். அழுவதற்கும், சிரிப்பதற்கும், களிகூருவதற்கும் போன்ற எல்லா ஆற்றலையும் தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். ஆனாலும், எந்த இரண்டு நபர்களும் சரியாக ஒரே மாதிரியாக இல்லாததால் வளர்ச்சி மற்றும் வெளிப்பாட்டின் அளவுகளில் பல தரங்கள் உள்ளன. சிலர் அழலாம், மற்றவர்கள் சிரிக்கலாம் இன்னும், மற்றவர்கள் அமைதியாக அமர்ந்திருக்கலாம். இப்படி ஒரே விஷயத்தை அனைவரும் சமமாக அனுபவிக்கிறார்கள். சிலருக்கு உணர்வெழுச்சிகளின் குறிப்பிடத்தக்க வெளிப்பாடு இருக்கின்றன. மற்றவர்களுக்கோ சமமான உணர்வுகள் இருந்தாலும் சிறிதளவே வெளிப்புற உணர்ச்சி வெளிப்பாடு இருக்கிறது. "அமைதியான நீர் ஆழமாக ஓடுகிறது" என்ற ஒரு வழக்கமான பழமொழி உண்டு. எனவே நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்காமல் கவனமுடன் இருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும், அதிக வெளிப்படுத்தும் தன்மை அல்லது குறைவான வெளிப்படுத்தும் தன்மை கொண்டவனாக இருந்தாலும் சத்தியம் மற்றும் சத்திய ஆவி ஆகிய இரண் டிலும் – நீதியிலும், பரிசுத்தத்திலும் வளர்ச்சியடைய வேண்டும்.

ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு இந்த பொருத்தமான கேள்வியைக் கேட்கிறார்: "***அற்ப விசுவாசிகளே, ஏன் பயப் படுகிறீர்கள்?***" ஆம், பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளையும் கூட பலவீனத்தால் பீடிக்கப்படலாம்! இயற்கையான உடலின் கண்கள் இருளடைவது அல்லது குருடாவது போல, நமது புரிந்துகொள்ளும் கண்களும் ஆகிவிடுகிறது. நாம் ஒருமுறை தெய்வீக வாக்குறுதியைப் பார்த்து மகிழ்ந்த பிறகு இந்த குருட்டுத்தனம் வந்தால், நம்முடைய நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கும். இன்னும் அந்த இருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! இன்னும் அதே வழியிலான இன்னொரு பாடமும் அங்கே இருக்கிறது. உலகப் பொருளின் மீது பற்றுக்கொண்டு உலகத்திற்கு செய்யும் ஊழியமானது நிகழ்கால வாழ்க்கையில் ஒருவேளை நம்மை ஆசீர்வதிக்கலாம், ஆனால் நம்முடைய எதிர்கால நலன்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது. அதே நேரத்தில் தேவனுக்கு நாம் செய்யும் ஊழியமானது, எதிர்கால செல்வாக்கிற்கு நம்மை தயார்படுத்தும், தேவனுக்கு கீழ்ப்படிவதினால், பாவத்தின் இன்பங்களையும், இந்த காலத்தின் சில நியாயமான ஆசீர்வாதங்களையும் நாம் இழக்கக்கூடும் என்றாலும், தேவனுக்கும், நீதிக்கும் உண்மை–யுள்ள ஊழியர்களாக இருப்பவர்களுக்கு இப்போதுங்கூட ஒரு ஆசீர்வாதம் இருக்கிறது. கூடுதலாக எதிர்காலத்தில், மகிமையான வாய்ப்பும் உண்டு. என்றாலும், இரண்டு எஜமான்களுக்கிடையில் ஒருவரைத் தெரிந்தெடுப்பது, நமக்கு அவசியமாயிருக்கிறது. நாம் இருவருக்கும் ஊழியஞ் செய்ய முடியாது. இரண்டின் வெகு–மதிகளையும் நாம் பெற இயலாது. யோசுவா செய்தது போல, "**நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்**" என்று தீர்மானிப்போமாக. நம்முடைய எல்லா நலன்களையும் தேவனுக்கு அர்ப்பணித்து, நமது திராணிக்குத்தக்கதாக அவருக்கு முழுவதுமாக கீழ்ப்படிய வேண்டும் என்று நாம் தீர்மானிக்கவும் அத்துடன் அடுத்ததாக அவருடைய வாக்குறுதிகளுக்கு இணங்கி அவருடன் விசேஷமான உறவிற்குள் வருவதின் காரணமாக அவருடைய சிருஷ்டிகள் அனைத்தின் மீதுள்ள தெய்வீக அக்கறை குறிப்பாக நம்மீது இருப்பதை உணர்ந்துகொள்ள வேண்டு மென்றும் நம்முடைய எஜமானர் நம்மைத் தூண்டுகிறார். தங்களின் பூமிக்குரிய விவகாரங்களைக் குறித்து அப்படிப் பட்டவர்கள் கவலைப்படத் தேவையில்லை, ஆனாலும், தங்கள் நலன்கள் அனைத்தையும் குறித்து தங்கள் பரலோக தகப்பனிடம் நம்பிக்கை வைக்கலாம். நமது நித்திய ஜீவன், தற்கால வாழ்வின் உணவையும், உடையையும்விட மதிப்புமிக்கது. நாம் ஞானமுள்ளவர்களாயிருந்தால், எதிர்கால வாழ்க்கையை அடைய எந்த விலைகொடுக்கவும், தற்காலத்தில் எந்த தியாகத்தைச் செய்யவும், நிச்சயமாக முயற்சி செய்வோம்.


நம்முடைய பரலோகப் பிதா, நம்முடைய நலன்களைக் கவனித்துக் கொள்ளும் திறனைப் பொறுத்தவரையில்,

ஆகாயத்துப் பறவைகளுக்கும், லில்லி புஷ்பத்திற்கும் அவருடைய ஏற்பாட்டில் விளங்கும் அவருடைய வல்லமை, ஞானம் மற்றும் கிருபை ஆகியவற்றின் வெளிப்பாடுகளை நாம் கவனிக்க வேண்டும். நமக்கு வேண்டிய சிறந்த நலன்களை வழங்குவதிலும், அதே அளவான வல்லமை அவரிடமிருப்பதை நாம் உணர வேண்டும். எனவே என்ன தான் நேரிடினும், விசுவாசமானது அவரை உறுதியாக நம்ப வேண்டும். லில்லி புஷ்பங்கள் மற்றும் பறவைகள் மீது அக்கறை கொண்ட தேவன், நாம் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்து, நம் வாழ்வை முழுவதுமாக பிரதிஷ்டை செய்து அவருடைய பிள்ளைகளான பிறகு நம்மீது மிக அதிக அக்கறை காட்ட மாட்டார் என்று நாம் நினைக்க வேண்டுமா? எனவே, ஏக்கமான கவலைகளை யெல்லாம் விலக்கி விடுவோம். கவலை இல்லாமல் இருப்பது என்பது வேலையைத் தேடுவதற்கும் அதை செய்வதற்கும் சரியான அக்கறையும் தகுந்த விடா முயற்சியும் இல்லாமல் இருப்பது என்று அர்த்தமாகாது. நம்முடைய பரமபிதா நமக்கு உண்மையாகவே தேவைப்படுபவைகளை நம்மைவிட மிக நன்றாக அறிந்திருக்கிறார். விசுவாசம் என்பது அவரை நாம் நம்புவது மட்டுமல்லாமல், நம்முடைய சிறந்த நலன்களுக்காக அவர் நமக்கு என்ன கொடுத்தாலும் அதை ஏற்றுக் கொள்வதுமாகும்.

இந்தப் பாதையைத் தொடருபவர்கள் எவரும் ஞானமாகச் செயல்படுவார்கள் என்றும், மேலும் தேவன் நம்முடைய உயர்ந்த நன்மைக்காக நம்முடைய பூமிக்குரிய நலன்களை கவனிப்பார் என்றும் நம்முடைய எஜமானரின் உறுதிமொழி நமக்கு இருக்கிறது. அவ்வாறு செய்தால் அவர்மேல் நம்பிக்கை வைக்கிறவர்களுக்கு, அவர் அளித்த வாக்குறுதியின்படி அவர்களுடைய ஜீவியங்கள் கர்த்தருக்குள் அமைதி, மகிழ்ச்சி மற்றும் இளைப்பாறுதலினால் முடிசூட்டப்பட்டிருக்கும்.

கிறிஸ்தவரல்லாத உலகின் நெறி தவறிய சிந்தனை மற்றும் போலியான நடத்தையின் போக்குகளை காட்டுவதற்கான ஒரு வழி முறையாக இந்த பாடத்தையும் அதன் ஆய்வையும் நாங்கள் கருதுகிறோம். சில சமயங்களில் கிறிஸ்தவருங்கூட மத். 6:33-ல் சொல்லப்பட்ட தேவனுடைய வார்த்தையைப் பற்றி தனக்குக் கட்டாயமாக நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. "**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.**" தேவனை அறிந்த முழு பிரதிஷ்டை செய்திருக்கிற கிறிஸ்தவர்களாகிய நாம், யேகோவா தேவனுடைய மகிமையான ராஜ்யத்திலும், அதன் நீதியிலும், அது உலகத்திடம் கோரும் நீதியிலும், ராஜ்யத்தில் பங்குபெறும் அனைவரும் கட்டாயம் அடைய வேண்டிய நீதியையும் நாம் எதிர்பார்க்கிறோம். இதைத்தான் நாம் முதலில் பிரதானமாகத் தேட வேண்டும். மேலும் வாழ்க்கையின் அனைத்து சோதனைகள் மற்றும் கஷ்டங்களின் மத்தியிலும் திருப்தியுடன் இருக்க வேண்டும். நம்முடைய பரமபிதா எந்த நன்மையையும், சந்தோஷங்களையும் அல்லது துக்கங்களையும், கஷ்டங்களையும் அல்லது ஆசீர்வாதங்களையும், எல்லாவற்றையுமே நம்முடைய நன்மைக்கேதுவாகும்படிச் செய்வார் என்றும், வாழ்க்கையின் தேவையான விஷயங்களை நமக்குக் கொடுப்பார் என்றும், அவருடைய ஞானத்தின்படி இந்த பூமியில் ஸ்தாபிக்கப்பட விருக்கும் அவருடைய ராஜ்யத்தில் அவர் நமக்கு எந்த ஸ்தானத்தைக் கொடுத்தாலும், நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்த இப்படிப்பட்ட அனுபவங்கள் நமக்கு உதவி செய்யும் என்றும் அவருடைய ஞானத்தையும், கிருபையையும் நாம் நம்ப வேண்டும். பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்களாகவும், விசுவாசத்தினால் நிறைந்தவர்களாகவும், விசுவாசம் நிறைந்த ஊழியக்காரர்களாகவும் இருப்பதைக் காட்டுவதற்கு கற்றுக் கொள்ள உறுதியான தீர்மானம் எடுப்போமாக. அப்படி இருக்கும்போது சந்தேகப்படுவதற்கு எந்த இடமுமிராது.

சத்தியம், நம்பிக்கை மற்றும் விசுவாசம் ஆகியவை மனதின் மதிப்பீடு மற்றும் இருதயத்தின் நிச்சயத்தின் உணர்வை நம்மில் உருவாக்குகின்றன. மேலும், மனதின் மதிப்பீடு மற்றும் இருதயத்தின் நிச்சயம் என்ற விசுவாசத்தின் உணர்வில் நாம் நிரப்பப்பட்டால், நாம் உண்மைத்துவமுள்ளவர்களாகிறோம். உண்மைத்துவம் என்பது ஒரு மூன்றாம் நிலை கிருபையாகும். மேலும் இது மற்ற எல்லா கிருபைகளையும் ஊடுருவிச் செல்ல வேண்டிய ஒரு குணப்பண்பாகும். அதன்படி நம்முடைய மற்றெல்லா கிருபைகளின் சேர்மானப் பண்பாயிருக்கிறது. அதுபோல, நமது பிரதிஷ்டையிலும் இது ஒரு சேர்மானப் பண்பாக இருக்கிறது. மூன்றாம் நிலை கிருபைகளில் இது மட்டுமே அதன் செயல்பாட்டில் பொதுவானதாக இருக்கிறது. இது தேவன், கிறிஸ்து, சத்தியம், சகோதரர்கள் மற்றும் நாம் தொடர்பு கொள்ளும் யாவருடனும், எல்லாவற்றிலும் சரியான கோட்பாடுகளுக்கு இசைவாக, நம்பகத்தன்மையுடன் இருப்பதாகும். பொறுமையுடன் விசுவாசம் இறுதியான ஜெயங்கொள்ளும் குணப்பண்பாக இருக்கிறது. ஆனாலும், இறுதியான பகுப்பாய்வில் பொறுமையை விட விசுவாசம் மிகவும் இறுதியானது, ஏனெனில் பொறுமையானது இறுதியில் விசுவாச உண்மைத்துவத்தின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட வேண்டும். ஆகவே, விசுவாசமே இறுதியான ஜெயங்கொள்ளுதலின் கிருபையாகும். விசுவாசத்தைப் பாதுகாப்போம், ஏனெனில் இது நம்பகத்தன்மையை குறிக்கிறது. மற்ற எல்லா குணங்களையும் விட விசுவாசமானது மற்ற அனைத்தையும் சரியான முறையில் வைத்திருக்கும் குணப்பண்பாக இருக்கிறது. ***




**எளிமையான அடிப்படை சத்திய பாடங்கள் இதில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.**




# எளிய மொழியில் வேதாகமம் பேசுகிறது - அறிமுகம்

BIBLE TALKS IN SIMPLE LANGUAGE INTRODUCTION

சிருஷ்டிப்பைப் பற்றிய புகைப்பட நாடகம் – ஃபோட்டோ டிராமா ஆஃப் கிரியேஷன், பாடம் பாடமாக, 2007 முதல் ஒரு தொடராக வெளியிடப்பட்டு வந்தது. ரஸல் போதகரின் அசல் வெளியீடு கொண்டிருந்த அருமையான அடிப்படை வேதாகம பாடங்களை நவீன வடிவத்தில் வழங்குவதே நோக்கமாக இருந்தது. இந்த பாடங்கள் அனைவருக்கும், சத்திய பாடங்களில் பாலர்களுக்கும், இளைஞர்களுக்கும் கூட மதிப்புமிக்கதாக இருந்தது. பைபிள் ஸ்டாண்டர்ட் நவம்பர்/டிசம்பர் 2022 இதழுடன் இந்த தொடர் இப்போது முடிவடைந்து விட்டது.

இப்பொழுது வேறு ஏதாவது தொடங்கி அந்த இடத்தை நிரப்புவதில் கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்கும் என்று நாங்கள் அறிந்து கொள்ள ஆவலுடனிருந்தோம். கட்டுரைகளின் பகுதியை அல்லது கூடுமாயின் வேதாகம கேள்விகளுடன் சரியாக நிரப்புவதை நாங்கள் கருத்தில் கொண்டோம். பல்வேறு சாத்தியக் கூறுகளைப் பற்றி கவனிக்கத்தக்க சிந்தனைக்குப் பிறகு, எளிய மொழியில் வேதாகமம் பேசுகிறது, (புத்தக வடிவில் கிடைப்பது இல்லை) என்ற புத்தகத்தின் பிரதியை மதிப்பாய்வு செய்தோம். அதிகமான ஜெபங்களின் பிரதிபலிப்புக்கு பிறகு, இந்த புத்தகத்தில் உள்ள பாடங்களை, நாங்கள் ஃபோட்டோ டிராமா ஆஃப் கிரியேஷன் கட்டுரையில் செய்த அதே பாணியில் வெளியிட முடிவு செய்தோம்.

'எளிய மொழியில் வேதாகமம் பேசுகிறது' என்ற புத்தகம் முதலில் 1896-ஆம் ஆண்டு சகோ. ஹோரேஸ். சி. ஃப்ரை (Horace C. Fry) என்பவரால் வெளியிடப்பட்டது, மேலும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வேதாகமம் சார்ந்த தலைப்புகளில் கல்வி கற்பிக்க உதவுவதற்காக ரஸல் போதகர் மூலம் பரவலாக விநியோகிக்கப்பட்டது. இந்த வேலையைப் பற்றி புத்தக ஆசிரியர் கூறுகிறார், "எல்லா வயதினருக்கும், எனினும் குறிப்பாக இளம் வயதினருக்கும் ஏற்றது." நிகழ்கால சத்தியம் பத்திரிக்கையின் ஆகஸ்ட் 1942 இதழில் (பக்கம் 123) ஜாண்சன் போதகர் இந்த புத்தகத்தில் உள்ள பாடங்களின் பட்டியலை வெளியிட்டார். அத்துடன் பொருத்தமான வேதவாக்கியங்களின் குறிப்புகளைச் சேர்த்தார். ஜாண்சன் போதகர் போதுமான அளவு நிதி கிடைத்தால் எதிர்காலத்தில் இந்த புத்தகத்தை மீண்டும் வெளியிட விரும்புவதாக குறிபிட்டுள்ளார், ஆனால் அது செய்யப்படவில்லை. இங்கே, சுமார் 80 ஆண்டுகளுக்குப் பிறகு, ஃபோட்டோ டிராமா போலவே தொடர் பாணியில் அந்த பாடங்களை (வேத வசன குறிப்புகளுடன்) மீண்டும் உருவாக்க நாங்கள் உற்சாகமாக இருக்கிறோம்.

சகோ. லியான் ஸ்னைடர், பதிப்பாசிரியர்.

**இந்த தொடரின் ஓர் அறிமுகமாக (முன்னுரை), ஆகஸ்ட் 1942, நிகழ்கால சத்தியம், பக்கம் 123 -லிருந்து ஜாண்சன் போதகர் எழுதியதை நாங்கள் மேற்கோள் காட்டுகிறோம்.**

பரோஷியா காலத்தில் நம்முடைய போதகர், பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் பயன்பாட்டிற்காக எளிய மொழியில் வேதாகமம் பேசுகிறது என்ற தலைப்பில் ஒரு வேதாகம வரலாற்றை, கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் பிள்ளைகளைக் கொண்டு வருவதற்கு பெற்றோர்களுக்கு உதவக் கூடிய வகையில் வழங்கினார். அவரது மரணத்திற்கு பிறகு, சொசைட்டி சிறிது காலத்திற்கு தொடர்ந்து அதை வழங்கியது, ஆனால் சில ஆண்டுகளுக்குப் பிறகு அப்படிச் செய்வதை நிறுத்திவிட்டது. மேலும் காலப்போக்கில் புத்தகத்தின் வெளியீட்டாளர்களின் மாற்றத்தின் மூலம், அது எங்கு கிடைக்கும் என்றும்தெரியவில்லை. நாங்கள் அடிக்கடி அவர்களைக் கண்டுபிடிக்க முயன்றோம்; ஆனால் தோல்வியடைந்தோம். எங்கள் தேடலில், புத்தகத்தில் பதிப்புரிமை பதிவுக்குறிப்பு இருந்தபோதிலும் பதிப்புரிமை அலுவலகத்தில் அதனுடைய பதிப்புரிமை பெற்றதற்கான ஆவணம் இல்லை என்பதை நாங்கள் அறிந்தோம். மேலும் பதிப்புரிமை மீறல் இல்லாமல் நாங்கள் அதை வெளியிடலாம் என்றும் எங்களுக்கு உறுதியளிக்கப் பட்டது. கர்த்தருக்கு சித்தமானால் அதற்கு தேவையான நிதி கிடைத்ததும் பல ஆண்டுகளாக இல்லாத இந்த புத்தகத்தை நாங்கள் வெளியிடுவோம். இதற்கிடையில் வேதாகம வரலாற்றைப் பற்றிய ஒரு பயனுள்ள பாடப்புத்தகம் பெற்றோருக்குத் தேவைப்படுகிறது. இதை ஓரளவு நிறைவு செய்ய இந்தக் கட்டுரையில் வேதாகமம் பேசுகிறது பாடங்களையும் அத்துடன் அந்தப் பாடங்களுக்கு ஆதாரமான வேத வசன மேற்கோள்களுடன் வெளியிடுகிறோம். எனவே, புத்தகத்தை வைத்திருப்பதற்குப் பதிலாக, நண்பர்கள் இந்த பாடங்கள் மற்றும் மேற்கோள்களின் உதவியுடன் வேதாகமங்களில் கொடுக்கப்பட்டுள்ள படி அந்த கதைகளை வேதாகமத்தில் கண்டுபிடித்து படிக்கலாம் மற்றும் போதுமான அளவு படிக்கக் கூடிய தங்கள் பிள்ளைகளை வேதாகமத்தில் இந்த கதைகளை படிக்க வைக்க வேண்டும், படிக்கத் தெரியாத பிள்ளைகளுக்கு, பெற்றோர்கள் கதைகளைப் படித்து, அவற்றை தங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்கி, பிறகு கதைகளின் மீது பிள்ளைகளை கேள்வி கேட்க வேண்டும், குழந்தைகளின் மாறுபட்ட திறன்களுக்கு ஏற்றவாறு கேள்விகளை வேறுபடுத்த வேண்டும். கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் பிள்ளைகள் நல்ல குணங்களை வளர்த்து கொள்ள

உதவுவதற்காக, பெற்றோர்கள் தகுந்த கேள்விகள் மூலம் அவர்களுடைய பிள்ளைகளின் இருதயம் பண்படுத்தப் படுவதற்கான பாடங்களை உருவாக்க வேண்டும். உதார ணமாக, காயீன் மற்றும் ஆபேல் பற்றிய கதை என்றால் அதிலிருந்து பின்வரும் அறிவுறுத்துகிற பாடங்கள் எடுக்கப்படலாம்: மூத்த பிள்ளைகள் தங்கள் இளைய சகோதரர்களின் பாதுகாவலர்களாக இருக்க வேண்டும். நாம் அனைவரும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். ஆபேல் செய்ததைப் போல நாம் கர்த்தருக்கு பிரியமான வழிகளில் ஊழியம் செய்ய வேண்டும், காயீனைப் போல அவருக்கு பிரியமில்லாத வழிகளில் அல்ல. நாம் நம்முடைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகளில் அன்பு கூர வேண்டும். அவர்களின் வெற்றிகளில் நாம் சந்தோஷப்பட வேண்டும். அவர்களின் நல்லதை நாம் பின்பற்ற நாட வேண்டும். தவறுக்கு எதிரான பின்வரும் எச்சரிக்கைகள் கதையிலிருந்து எடுக்கப்படலாம்: காயீன் செய்தது போல், நம் சகோதர சகோதரிகள் நம்மை விட அதிகமாக ஜெயம் பெற்றவர்களாயிருந்தால் அவர்கள் மீது பொறாமைப்படக் கூடாது. காயீன் செய்தது போல் நம் சகோதர சகோதரிகளைக் காயப்படுத்தாமல் இருப்போமாக. காயீன் செய்தது போல் கர்த்தரின் சீர்திருத்தல்களுக்கு கீழ்ப்படியாதவர்களாக நாம் இருக்க கூடாது. காயீன் செய்தது போல நம் சகோதர சகோதரிகளுக்கு அநீதி இழைத்து நம் பெற்றோரை துக்கப்படுத்தாதிருப்போமாக. பெற்றோரிடம் கதைகளின் விளக்கப் படங்கள் இருந்தால், கதைகளை மனப்பதிவு செய்வதற்கும், குறிப்பாக இளம் பிள்ளைகளின் நன்மைக்காக இவைகள் பயன்படுத்தப்பட வேண்டும்; உண்மையில் இளம்பிள்ளைகளுக்கு, படத்தில் இருந்து கதை சொல்லப்பட வேண்டும்; படத்தில் காட்டப்பட்டுள்ள கதையின் ஒவ்வொரு முக்கிய விஷயத்திலும் மேற்கோள் காட்டப்பட வேண்டும். இந்த காரியத்தில் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு, பெற்றோர்களுக்குரிய மத சம்பந்தமான கடமைகளையும் சிலாக்கியங்களையும் நிறைவேற்றும்போது கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக!

# வேதாகமம் பேசுகிறது

பாடம்–1;
சிருஷ்டிப்பு*
ஆதி. 1:1–2:25

ஒரு போதுமே பழைமையாகாத ஒரு புஸ்தகத்திலிருந்து எளிய மொழியில் கதைகள்

BIBLE TALKS

Stories in Simple Language From The One Book That Never Grows Old

வானமும் பூமியும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டன. பூமி இப்போது இருப்பது போல் முதலில் தோன்ற வில்லை. அது ஒழுங்கின்மையாகவும், மிகப் பெரிய உபயோகமற்ற ஒன்றாகவும் இருந்தது; ஆழத்தின் மேல் இருள் இருந்தது. அப்பொழுது தேவனுடைய ஆவி ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தது என்று நமக்குச் சொல்லப்படுகிறது. வெளிச்சம் உண்டாகட்டும் என்று தேவன் சொல்லும் வரை வெளிச்சம் இல்லை; அப்போது வெளிச்சம் ஒளி பிரகாசமாக வெடித்தது. தேவன் வெளிச்சத்தை நல்லது என்று கண்டார். தேவன் வெளிச்சத்தையும் இருளையும் பிரித்தார், தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார்; இருளுக்கு இரவு என்று பேரிட்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று.

பின்பு தேவன் ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தை பிரிக்கக்கடவது என்றும் சொன்னார். தேவன் ஆகாய விரிவை உண்டு பண்ணி, ஆகாய விரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்: அது அப்படியே ஆயிற்று. தேவன் ஆகாய விரிவுக்கு வானம் என்று பேரிட்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆகிற்று.

பின்பு தேவன், வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்! அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந் தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லது என்று கண்டார். மேலும் தேவன் பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப் பிக்கக்கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று. பூமியா னது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின் படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும் தங்களில் தங்கள் ஜாதியின் படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப் பித்தது: தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங் காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று.

பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங் களுக்காவும், காலங்களையும் நாட்களையும் வருஷங் களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார்; அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று. தேவன், பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக் கினார். அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கவும், பகலையும் இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாயவிரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று.

## ஜலத்தில் மீன்கள் ஆகாய விரிவில் பறவைகள்

பின்பு தேவன்: நீந்தும் ஜீவ ஜந்துக்களையும், பூமியின் மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும்

பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜெநிப்பிக்கக்கடவது என்றார். தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜெநிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக்கடவது என்றும் சொன்னார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று.

பின்பு தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவ ஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. தேவன் அது நல்லது என்று கண்டார். பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும் பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதை கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். பின்னும் தேவன்: இதோ, பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும்,விதைதரும் கனி மரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது: பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின் மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தேன் என்றார்; அது அப்படியே ஆயிற்று. அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.

இவ்விதமாக வானமும், பூமியும் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டு தீர்ந்தன. தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவன் தாம் சிருஷ்டித்து உண்டு பண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

## பூமியின் மண்ணினாலே மனுஷனை உண்டாக்கினார்

தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே. நிலத்தினுடைய சகலவிதச் செடிகளும் பூமியின் மேல் இன்னும் உண்டாகவில்லை, நிலத்தினுடைய சகலவிதப் பூண்டுகளும் இன்னும் முளைக்கவில்லை; ஏனெனில் தேவனாகிய கர்த்தர் பூமியின் மேல் இன்னும் மழையைப் பெய்யப்பண்ணவில்லை; நிலத்தைப் பண்படுத்த மனுஷனும் இருந்ததில்லை. அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது. தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.

தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார். தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும், பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.

பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும் ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை.

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்.

***

# புது வருடத்திற்கான சிந்தனைகள்

Thoughts for the New Year

கடந்த ஆண்டுகளில் நம்முடைய ஜீவியத்தில் நாம் பெற்றுக் கொண்ட தெய்வீக பரிபாலனத்தின் வழிகாட்டுதலைப் புதுப்பிப்போம். வரவிருக்கும் வருடத்தைப் பொறுத்த மட்டில் தேவனுடைய நன்மையும், இரக்கமும் அவர் மீது நம்முடைய விசுவாசத்தையும் திட நம்பிக்கை-யையும் தூண்டட்டும்.

நமது பங்கில் ஒரு சரியான பின்னோக்கிப் பார்த்தலானது, நிச்சயமாக கடந்த கால ஆசீர்வாதங்களுக்கு கட்டாயமாக மனப்பூர்வமான நன்றியை செலுத்த தூண்ட வேண்டும். மேலும் எதிர்காலத்தை பற்றிய உயரிய நம்பிக்கைக்கு நம்மை எழுச்சியடையவும், நாம் முதலில் நம்பியதைவிட நமது விடுதலை சமீபமாக உள்ளது என்பதையும்கூட உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

## பிரதிபலித்தல்

வருடத்தின் தொடக்கத்தில் தேவனுடனான நமது உறவைப் பற்றி ஒரு தனிப்பட்ட மதிப்பீட்டைச் செய்வது பொருத்தமானது, நம்மை நாமே கேட்டுக்கொள்வது: கர்த்தாவே, நான் எப்படி நிற்கிறேன்? கடந்த வருடம் என்னை உம்மிடம் நெருங்கி வரச் செய்ததா? உம்முடைய வார்த்தை-யைப் படிப்பதில் நான் ஜாக்கிரதையுடன் இருந்தேனா? உமது பரிசுத்த சித்தத்தை என் ஜீவியத்தில் பிரதானமாக வைத்திருந்தேனா? எல்லாவற்றிற்கும் மேலாக, நான் உம்முடைய பிரசன்னத்தை இடைவிடாது தேடுகிறேனா – ஒவ்வொரு நாளையும் உமது பொறுப்புக்கு நான் ஒப்புவித்தேனா, மேலும் ஒவ்வொரு நாளின்முடிவிலும் ஒவ்வொரு ஆசீர்வாதத்திற்கும் நன்றி சொல்ல மறவா திருந்தேனா? உமது பேரிலுள்ள என் அன்பு ஒரு வருடத்திற்கு முன்பிருந்ததைவிட மிகப் பெரியதாகி ஆகி இருக்கிறதா? நாங்கள் அதிகமாக நெருங்கி இருக்கிறோமா? விசுவாசத்தில் என்னுடனிருப்பவர்களிடத்தில் ஒரு வருடத்திற்கு முன்பிருந் ததைவிட அதிகமாக அன்பு கூருகிறேனா? குற்றம் காண்பது குறைந்திருக்கிறதா? உலகில் உள்ளவர்களுக்காகவும் இயேசு மரித்தார் என்பதை நினைவு கூர்ந்து, அவர்களிடம்கூட நான் அதிக அனுதாபமும் அன்பும் செலுத்துவதில் அதிக வளர்ச்சியடைந்திருக்கிறேனா? நான் அனைவரிடமும் எப்போதும் எளிமையாகவும் நேர்மையாகவும் இருந்தேனா?




## புதுப்பித்தல்

அநேகமாக நம்மில் பெரும்பாலோர் வருத்தப்படுவ தற்கு சில காரணத்தைக் கொண்டிருக்கிறோம் மற்றும் நாம் இன்னும் சிறப்பாக செய்திருக்க வேண்டும் என்றும் உணர்கிறோம், ஆனால் ஒரு புதிய வருடம் என்பது புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடப்பதற்கு ஒரு புதிய வாய்ப்பாகும். **“தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிற தினாலே மறுரூபமாகுங்கள்.”** – (ரோம. 12:2).

புதிய வானங்கள் மற்றும் புதிய பூமியின் ஸ்தாபிப் பதற்காக நாம் காத்திருக்கிறபடியால், இந்த புது வருடத்தின் தொடக்கத்தில் அதை நம் ஜீவியத்தின் மிகச் சிறந்த வருடமாக ஆக்க நாம் உறுதி கொள்வோமாக. மிகப்பெரிய நம்பிக்கைகளின் வருடமாக மகத்தான முயற்சிகளின் வருடமாக, கர்த்தருடைய கிருபையின் மூலமாக, உலகத்தை-யும் அதன் ஆவியையும் ஜெயிப்பதிலும், சுயத்தை ஜெயிப்பதிலும் தேவனை மகிமைப் படுத்துவதிலும், அவருடைய ஜனத்தை ஆசீர்வதிப்பதிலும் மிகப்பெரிய வெற்றியின் வருடமாக ஆக்குவோமாக. நாம் அவருக்கும் அவருடைய சத்திய வார்த்தைகளுக்கும் ஊழியம் செய்ய முயற்சி செய்யும் போது, தேவன் நம்மையும் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக!

நம் உதடுகள் யேகோவா தேவனைத் துதித்து, கனப்படுத்துவதாக, ஏனெனில் அவருடைய அன்பிரக்கம் ஜீவனை பார்க்கிலும் சிறந்தது. (சங். 63:3). உங்களுடைய ஐக்கியம் சந்தோஷமாகவும், உங்களுடைய கற்றல் ஆசீர்வதிக்கப்பட்டதாகவும் இருப்பதாக! ***

Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**